*கவனிக்க.- 2017.03.03 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II பிரசுரசிக்கப்படவில்லை.*

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2010 - 2017 මාර්තු මස 10 වැනි සිකුරාදා - 2017.03.10

*2010 ஆம் இலக்கம் - 2017 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 10 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

## பகுதி IV (அ) - மாகாண சபைகள்

**(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)**


| | பக்கம் |
|---|---|
| ஆளுநர்களின் பிரகடனங்களும் பிறவும் | - |
| ஆளுநர்களின் நியமனங்களும் பிறவும் | - |
| மற்றைய நியமனங்களும் பிறவும் | - |
| மாகாண சபை அறிவித்தல்கள் | 606 |
| மாகாண சபையின் நானாவித அறிவித்தல்கள் | - |
| துணைவிதிகள் | - |
| பதவிகள் - வெற்றிடம் | - |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 626 |
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - |
| ஆதன விற்பனைகள் | - |
| ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| நானாவித அறிவித்தல்கள் | - |


***கவனிக்க.-*** *(i) கடற்றொழில் நீர்வாழ் உயிரின வளங்கள் (திருத்தம்) சட்டமூலம் 2017, பெப்புருவரி மாதம் 17ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகின்றது.*

*(ii) இலங்கைப் பட்டயக் கப்பற் தரகர்கள் நிறுவகம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் 2017, பெப்புருவரி மாதம் 17 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகின்றது.*

### வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான முக்கிய அறிவித்தல்கள்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* ***வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்***. *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு* ***இரண்டு வாரங்களுக்கு முன்னர்***, *அதாவது 2017, மாச்சு மாதம் 31 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2017, மாச்சு மாதம் 17 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு துபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**கங்கானி லியனகே,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*

*கொழும்பு 8,*

*2017 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

# மாகாண சபை அறிவித்தல்கள்

வடமேல் மாகாண கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களம்

*1972 ஆம் ஆண்டின் 05 ஆம் இலக்க கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் 57(2) ஆம் உபபிரிவுக்கு அமைவாக வெளியிடப்படும் அறிவித்தல்*

*பதிவுகள் இரத்துச் செய்யப்பட்ட பின்வரும் கூட்டுறவுச் சங்கங்களின் கலைத்து மூடும் பணிகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதென பதிவினை இரத்துச் செய்த அனைத்து கூட்டுறவுச் சங்கங்களின் உறுப்பினர்களுக்கும், கடன் கொடுத்தோருக்கும் இலங்கை பிரசைகள் அனைவருக்கும் 1983 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க, 1992 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க கூட்டுறவுச் சங்கங்கள் (திருத்த) சட்டங்களினால் திருத்தப்பட்டவாறான 1972 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் 57(2) ஆம் உபபிரிவுக்கு அமைவாக இத்தால் அறியத்தருகின்றேன். பதிவு இரத்துச் செய்யப்பட்ட பின்வரும் ஏதேனும் கூட்டுறவுச் சங்கமொன்றிலிருந்து தங்களுக்கு கிடைக்கவேண்டிய உரிமை கோரிக்கைகள் இருப்பின், இந்த அறிவித்தல் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் (அதிவிசேட) பிரசுரிக்கப்பட்ட திகதியிலிருந்து மூன்று (3) மாத காலத்திற்குள் இந்த உரிமை கோரிக்கைகளுக்காக விண்ணப்பிக்க வேண்டுமென இலங்கை பிரசைகள் அனைவருக்கும் பதிவு இரத்துச் செய்யப்பட்ட கூட்டுறவுச் சங்கங்களின் உறுப்பினர்களுக்கும் கடன் கொடுத்தோருக்கும் இத்தால் அறியத்தருகின்றேன். இந்த அறிவித்தல் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட திகதியிலிருந்து மூன்று (3) மாத காலம் கடந்ததன் பின்னர் முன்வைக்கப்படும் உரிமை கோரிக்கைகள் தொடர்பில் பரிசீலனை செய்யப்படமாட்டாதென்பதையும் அறியத்தருகின்றேன்.*

**குருநாகல் பிரிவு**

| தொடர் இல. | முன்னைய பதிவு | சங்கத்தின் பெயர் | மூடப்பட்ட திகதி | மாவட்டம் |
|---|---|---|---|---|
| 01 | கு/618 | வரையறுக்கப்பட்ட கெப்பிட்டிவலான தச்சுத் தொழிலாளர்களின் கூட்டுறவுச் சங்கம் | 2015.12.07 | குருநாகல் |
| 02 | வமா/கு/225 | வரையறுக்கப்பட்ட வீரே கான்தா கிராமிய கைத்தொழில் கூட்டுறவுச் சங்கம் | 2015.12.07 | குருநாகல் |
| 03 | கு/1581 | வரையறுக்கப்பட்ட உடபொல தச்சுத் தொழிலாளர்களின் கூட்டுறவுச் சங்கம் | 2015.12.07 | குருநாகல் |
| 04 | வமா/கு/வ/6 | வரையறுக்கப்படாத நெபடவெவ பிராஹ்மனகம சிக்கன மற்றும் கடன் கொடுக்கல் வாங்கல் கூட்டுறவுச் சங்கம் | 2015.12.07 | குருநாகல் |
| 05 | வமா/கு/349 | வரையறுக்கப்பட்ட பஹல அம்பாலே பிரதிபா மகளிர் சுவசக்தி கூட்டுறவுச் சங்கம் | 2015.12.08 | குருநாகல் |
| 06 | வப/கு/512 | வரையறுக்கப்பட்ட பிட்டலேவெவ கமத்தொழில் உற்பத்திகள் கூட்டுறவுச்சங்கம் | 2015.12.08 | குருநாகல் |
| 07 | கு/1979 | வரையறுக்கப்பட்ட ஜயராஜ மகா வித்தியாலய கூட்டுறவுச் சங்கம் | 2015.12.08 | குருநாகல் |
| 08 | வமா/கு/169 | வரையறுக்கப்பட்ட மாவத்தை கிராமிய கைத்தொழில் அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கம் | 2015.12.07 | குருநாகல் |
| 09 | வமா/கு/122 | வரையறுக்கப்பட்ட மாலகமுவ மகளிர் கிராமிய கைத்தொழில் கூட்டுறவுச் சங்கம் | 2015.12.08 | குருநாகல் |
| 10 | கு/2019 | வரையறுக்கப்பட்ட வன்னிகுடாவெவ மகா வித்தியாலய பாடசாலை கூட்டுறவுச் சங்கம் | 2015.12.08 | குருநாகல் |
| 11 | கு/2108 | வரையறுக்கப்பட்ட இராஜாங்கனய கரை 5 சோலே மகா வித்தியாலய பாடசாலை கூட்டுறவுச் சங்கம் | 2016.02.07 | குருநாகல் |
| 12 | வமா/கு/321 | வரையறுக்கப்பட்ட குடா உயன்கல்ல கிராமிய கைத்தொழில் கூட்டுறவுச் சங்கம் | 2016.03.03 | குருநாகல் |
| 13 | கு/1923 | வரையறுக்கப்படாத மீகலாவ சிக்கன மற்றும் கடன் கொடுக்கல் வாங்கல் கூட்டுறவுச் சங்கம் | 2016.03.17 | குருநாகல் |
| 14 | வமா/கு/179 | வரையறுக்கப்பட்ட கட்டுப்பிட்டிய ஐக்கிய கிராமிய கைத்தொழில் கூட்டுறவுச் சங்கம் | 2016.03.17 | குருநாகல் |
| 15 | வமா/கு/61 | வரையறுக்கப்பட்ட நாம்பிலிகும்புற கிராமிய கைத்தொழில் அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கம் | 2016.03.23 | குருநாகல் |
| 16 | கு/2013 | வரையறுக்கப்பட்ட மஹாநான்நேரிய மகா வித்தியாலய கூட்டுறவுச் சங்கம் | 2016.03.17 | குருநாகல் |
| 17 | குளி/331 | வரையறுக்கப்படாத இமியங்கொட சிக்கன மற்றும் கடன் கொடுக்கல் வாங்கல் கூட்டுறவுச் சங்கம் | 2016.04.06 | குருநாகல் |
| 18 | வமா/கு/488 | வரையறுக்கப்பட்ட மாமுனுவ ரஜகஹ மலர் செய்கையாளர்களின் கூட்டுறவுச் சங்கம் | 2016.04.06 | குருநாகல் |

| தொடர் இல. | முன்னைய பதிவு | சங்கத்தின் பெயர் | மூடப்பட்ட திகதி | மாவட்டம் |
|---|---|---|---|---|
| 19 | வமா/கு/நா/3 | வரையறுக்கப்பட்ட நாரம்மல பிரதேச செயலகப் பிரிவின் கோழி வளர்ப்பாளர்களின் கூட்டுறவுச் சங்கம் | 2016.04.06 | குருநாகல் |
| 20 | வமா/கு/23 | வரையறுக்கப்பட்ட ஹெட்டிகம கிராமிய கைத்தொழில் அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கம் | 2016.04.06 | குருநாகல் |
| 21 | கு/2012 | வரையறுக்கப்பட்ட திம்புலாகல மகா வித்தியாலய கூட்டுறவுச் சங்கம் | 2016.04.06 | குருநாகல் |
| 22 | வமா/கு/304 | வரையறுக்கப்பட்ட ரத்மல்கொட பால் உற்பத்தியாளர்களின் கூட்டுறவுச் சங்கம் | 2016.04.06 | குருநாகல் |
| 23 | வமா/கு/177 | வரையறுக்கப்பட்ட கோவாகொட்டுவ பிரகதி கிராமிய கைத்தொழில் அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கம் | 2016.04.12 | குருநாகல் |
| 24 | வமா/கு/256 | வரையறுக்கப்பட்ட தொரட்டியாவ விசாக்கா மகளிர் கிராமிய கைத்தொழில் அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கம் | 2016.04.12 | குருநாகல் |
| 25 | வமா/கு/104 | வரையறுக்கப்பட்ட வேதினிகம கிராமிய கைத்தொழில் அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கம் | 2016.04.20 | குருநாகல் |
| 26 | கு/1486 | வரையறுக்கப்படாத கொப்பேவெஹர சிக்கன மற்றும் கடன் கொடுக்கல் வாங்கல் கூட்டுறவுச் சங்கம் | 2016.04.20 | குருநாகல் |
| 27 | வமா/கு/36 | வரையறுக்கப்பட்ட அளவக்க கிராமிய கைத்தொழில் அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கம் | 2016.04.20 | குருநாகல் |
| 28 | வமா/கு/206 | வரையறுக்கப்பட்ட கரந்தவெட்டிய கிராமிய கைத்தொழில் அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கம் | 2016.04.27 | குருநாகல் |
| 29 | வமா/குளி/32 | வரையறுக்கப்பட்ட மில்லகொட கிராமிய கைத்தொழில் அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கம் | 2016.04.29 | குருநாகல் |
| 30 | வமா/கு/83 | வரையறுக்கப்பட்ட திலக்கபுர கிராமிய கைத்தொழில் அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கம் | 2016.05.19 | குருநாகல் |
| 31 | வமா/கு/24 | வரையறுக்கப்பட்ட உதானகம கிராமிய கைத்தொழில் அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கம் | 2016.05.25 | குருநாகல் |
| 32 | வமா/கு/பொ/8 | வரையறுக்கப்படாத யாப்பஹூவ விவசாய கிணறுகள் துணைப் பயிர் உற்பத்தி கூட்டுறவுச் சங்கம் | 2016.06.07 | குருநாகல் |
| 33 | வமா/நிக/5 | வரையறுக்கப்பட்ட நிக்கவெரட்டிய மாதிரி முஸ்லிம் மகா வித்தியாலய கூட்டுறவுச் சங்கம் | 2016.06.07 | குருநாகல் |
| 34 | கு/1620 | வரையறுக்கப்பட்ட சியம்பலங்கமுவ சிக்கன மற்றும் கடன் கொடுக்கல் வாங்கல் கூட்டுறவுச் சங்கம் | 2016.06.07 | குருநாகல் |
| 35 | வமா/கு/207 | வரையறுக்கப்பட்ட நாரம்மல்ல செனசும கிராமிய கைத்தொழில் கூட்டுறவுச் சங்கம் | 2016.06.07 | குருநாகல் |
| 36 | வமா/கு/47 | வரையறுக்கப்பட்ட ஹிந்தன விஜய கிராமிய கைத்தொழில் கூட்டுறவுச் சங்கம் | 2016.06.07 | குருநாகல் |
| 37 | வமா/கு/112 | வரையறுக்கப்பட்ட கிரிந்திகல்ல நிர்மாண கிராமிய கைத்தொழில் அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கம் | 2016.06.13 | குருநாகல் |
| 38 | குளி/406 | வரையறுக்கப்படாத பானகடுவ பெரகும் சிக்கன மற்றும் கடன் கொடுக்கல் வாங்கல் கூட்டுறவுச் சங்கம் | 2016.06.13 | குருநாகல் |
| 39 | வமா/கு/173 | வரையறுக்கப்பட்ட பஹல வேத்தாவகந்த ஐக்கிய கிராமிய கைத்தொழில் கூட்டுறவுச் சங்கம் | 2016.06.13 | குருநாகல் |
| 40 | வமா/கு/293 | வரையறுக்கப்பட்ட வீரம்புகெதர பால் உற்பத்தியாளர்களின் கூட்டுறவுச் சங்கம் | 2016.06.13 | குருநாகல் |
| 41 | வமா/கு/63 | வரையறுக்கப்பட்ட அந்தரவெவ கிராமிய கைத்தொழில் அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கம் | 2016.07.15 | குருநாகல் |
| 42 | வமா/கு/பொ/19 | வரையறுக்கப்பட்ட அமுனுகம நிஜபிம சுவசக்தி ஆதாரமன்ற கூட்டுறவுச் சங்கம் | 2016.08.25 | குருநாகல் |
| 43 | வமா/குரு/12 | வரையறுக்கப்பட்ட குருநாகல் மாவட்ட சுவசக்தி ஆதாரமன்ற கூட்டுறவுச் சங்கம் | 2016.08.30 | குருநாகல் |
| 44 | வமா/கு/305 | வ/ப போயகனே பால் உற்பத்தியாளர்களின் கூட்டுறவுச் சங்கம் | 2016.09.09 | குருநாகல் |
| 45 | வமா/கு/191 | வரையறுக்கப்பட்ட முறுத்தவ கிராமிய கைத்தொழில் கூட்டுறவுச் சங்கம் | 2016.09.27 | குருநாகல் |
| 46 | வமா/கு/287 | வரையறுக்கப்பட்ட கலகெதரகம ஐக்கிய மகளிர் சுவசக்தி கூட்டுறவுச் சங்கம் | 2016.09.27 | குருநாகல் |
| 47 | கே. 31 | வரையறுக்கப்படாத கொலம்பலாமுல்ல சிக்கன மற்றும் கடன் கொடுக்கல் வாங்கல் கூட்டுறவுச் சங்கம் | 2016.11.17 | குருநாகல் |
| 48 | வமா/கு/156 | வரையறுக்கப்பட்ட ராஜாங்கன நீர்த்தேக்க கடற்றொழில் கூட்டுறவுச் சங்கம் | 2016.11.17 | குருநாகல் |
| 49 | கு/1518 | வரையறுக்கப்பட்ட தொடம்கஸ்லந்த மத்திய மகா வித்தியாலய பாடசாலை கூட்டுறவுச் சங்கம் | 2016.11.17 | குருநாகல் |
| 50 | கு/2034 | வரையறுக்கப்பட்ட கல்பாலுவ வித்யாதீப வித்தியாலய கூட்டுறவுச் சங்கம் | 2016.11.17 | குருநாகல் |

**குளியாப்பிட்டிய பிரிவு**

| தொடர் இல. | முன்னைய பதிவு | சங்கத்தின் பெயர் | மூடப்பட்ட திகதி | மாவட்டம் |
|---|---|---|---|---|
| 51 | வமா/குளி/17 | வரையறுக்கப்பட்ட கல்பொல குடியேற்ற கிராமிய கைத்தொழில் கூட்டுறவுச் சங்கம் | 2015.11.19 | குளியாபிட்டிய |
| 52 | வமா/கு/பன்/13 | வரையறுக்கப்பட்ட பெத்திகொடகெதர நிஜபிம சுவசக்தி ஆதாரமன்ற கூட்டுறவுச் சங்கம் | 2015.11.19 | குளியாபிட்டிய |
| 53 | வமா/குளி/82 | வரையறுக்கப்பட்ட ஹபரவெவ சத்கார்ய சுவசக்தி கூட்டுறவுச் சங்கம் | 2015.11.19 | குளியாபிட்டிய |
| 54 | குளி/59 | வரையறுக்கப்பட்ட கிரியுள்ள கூட்டுறவு நகர வங்கி | 2015.11.19 | குளியாபிட்டிய |
| 55 | வமா/கு/கொ/19 | வரையறுக்கப்பட்ட சமகிகம சுவசக்தி ஆதாரமன்ற கூட்டுறவுச் சங்கம் | 2016.01.13 | குளியாபிட்டிய |
| 56 | குளி/371 | வரையறுக்கப்படாத கொஸ்வத்த ஹேன்யாய சிக்கன மற்றும் கடன் கொடுக்கல் வாங்கல் கூட்டுறவுச் சங்கம் | 2016.01.19 | குளியாபிட்டிய |
| 57 | குளி/212 | வரையறுக்கப்பட்ட போவத்த பால் உற்பத்தியாளர்களின் கூட்டுறவுச் சங்கம் | 2016.04.06 | குளியாபிட்டிய |
| 58 | குளி/367 | வரையறுக்கப்படாத பனாபிட்டிய ஐக்கிய சிக்கன மற்றும் கடன் கொடுக்கல் வாங்கல் கூட்டுறவுச் சங்கம் | 2016.04.06 | குளியாபிட்டிய |
| 59 | வமா/கு/ கொ/7 | வரையறுக்கப்பட்ட நிஜபிம சுவசக்தி ஆதாரமன்ற ஹிரிகொல்ல கூட்டுறவுச் சங்கம் | 2016.04.06 | குளியாபிட்டிய |
| 60 | குளி/369 | வரையறுக்கப்படாத கந்தத்தாவ கருணாநிதி சிக்கன மற்றும் கடன் கொடுக்கல் வாங்கல் கூட்டுறவுச் சங்கம் | | குளியாபிட்டிய |
| 61 | குளி/303 | வரையறுக்கப்படாத வடுகெதர சிக்கன மற்றும் கடன் கொடுக்கல் வாங்கல் கூட்டுறவுச் சங்கம் | 2016.05.13 | குளியாபிட்டிய |
| 62 | கு/1656 | வரையறுக்கப்படாத பலதொர சிக்கன மற்றும் கடன் கொடுக்கல் வாங்கல் கூட்டுறவுச் சங்கம் | 2016.05.13 | குளியாபிட்டிய |
| 63 | கு/1605 | வரையறுக்கப்படாத மெல்லகஸ்வெவ சிக்கன மற்றும் கடன் கொடுக்கல் வாங்கல் கூட்டுறவுச் சங்கம் | 2016.05.13 | குளியாபிட்டிய |
| 64 | குளி/434 | வரையறுக்கப்படாத தாவல்ல சிக்கன மற்றும் கடன் கொடுக்கல் வாங்கல் கூட்டுறவுச் சங்கம் | 2016.06.01 | குளியாபிட்டிய |
| 65 | குளி/314 | வரையறுக்கப்படாத கொவுல்வெவ பிரதேச சிக்கன மற்றும் கடன் கொடுக்கல் வாங்கல் கூட்டுறவுச் சங்கம் | 2016.06.01 | குளியாபிட்டிய |
| 66 | கு/392 | வரையறுக்கப்படாத கெலிநாவல சிக்கன மற்றும் கடன் கொடுக்கல் வாங்கல் கூட்டுறவுச் சங்கம் | 2016.06.01 | குளியாபிட்டிய |
| 67 | குளி/219 | வரையறுக்கப்பட்ட கந்தெட்டிய விவசாயிகள் கமத்தொழில் மற்றும் கைத்தொழில் கூட்டுறவுச் சங்கம் | 2016.06.01 | குளியாபிட்டிய |
| 68 | வமா/குளி/157 | வரையறுக்கப்பட்ட போஹிங்கமுவ சத்கார சுவசக்தி கூட்டுறவுச் சங்கம் | 2016.06.27 | குளியாபிட்டிய |
| 69 | வமா/கு/ பன்/19 | வரையறுக்கப்பட்ட எலபடகம வடக்கு சுவசக்தி ஆதாரமன்ற கூட்டுறவுச் சங்கம் | 2016.06.27 | குளியாபிட்டிய |
| 70 | குளி/73 | வரையறுக்கப்பட்ட குளியாபிட்டிய கனிஷ்ட பல்கலைக்கழக உத்தியோகத்தர்களின் சிக்கன மற்றும் கடன் கொடுக்கல் வாங்கல் கூட்டுறவுச் சங்கம் | 2016.06.27 | குளியாபிட்டிய |
| 71 | வமா/குளி/19 | வரையறுக்கப்பட்ட வடுகெதல நாரங்கல்ல கிராமிய கைத்தொழில் அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கம் | 2016.06.29 | குளியாபிட்டிய |
| 72 | வமா/கு/ பொ/116 | வரையறுக்கப்படாத மடஇன சிக்கன மற்றும் கடன் கொடுக்கல் வாங்கல் கூட்டுறவுச் சங்கம் | 2016.06.29 | குளியாபிட்டிய |
| 73 | வமா/கு/கொ/33 | வரையறுக்கப்பட்ட அளஹேன்கம விசாக்கா சுவசக்தி கூட்டுறவுச் சங்கம் | 2016.06.30 | குளியாபிட்டிய |
| 74 | குளி/295 | வரையறுக்கப்படாத பரிகொட சிக்கன மற்றும் கடன் கொடுக்கல் வாங்கல் கூட்டுறவுச் சங்கம் | 2016.08.26 | குளியாபிட்டிய |
| 75 | வமா/கு/பொ/37 | வரையறுக்கப்பட்ட நிஜபிம சுவசக்தி உஸ்வெவ கிழக்கு கூட்டுறவுச் சங்கம் | 2016.08.26 | குளியாபிட்டிய |
| 76 | வமா/கு/ பொ/30 | வரையறுக்கப்பட்ட வடுமுன்ன சிறிபாலி சுவசக்தி ஆதாரமன்ற கூட்டுறவுச் சங்கம் | 2016.08.26 | குளியாபிட்டிய |
| 77 | கு/1642 | வரையறுக்கப்படாத மிதெல்லவ சிக்கன மற்றும் கடன் கொடுக்கல் வாங்கல் கூட்டுறவுச் சங்கம் | 2016.08.26 | குளியாபிட்டிய |

| தொடர் இல. | முன்னைய பதிவு | சங்கத்தின் பெயர் | மூடப்பட்ட திகதி | மாவட்டம் |
|---|---|---|---|---|
| 78 | குளி/390 | வரையறுக்கப்படாத ஹெட்டிரிப்புவ சிக்கன மற்றும் கடன் கொடுக்கல் வாங்கல் கூட்டுறவுச் சங்கம் | 2016.07.05 | குளியாபிட்டிய |
| 79 | கு/2051 | வரையறுக்கப்பட்ட ஹென்டியாகல ரத்தனபால மகா வித்தியாலய கூட்டுறவுச் சங்கம் | 2016.10.05 | குளியாபிட்டிய |
| 80 | வமா/குளி/8 | வரையறுக்கப்பட்ட கித்தளவ பூகல்ல புபுது ஐக்கிய சிக்கன மற்றும் கடன் கொடுக்கல் வாங்கல் கூட்டுறவுச் சங்கம் | 2016.10.31 | குளியாபிட்டிய |
| 81 | வமா/கு/கொ/3 | வரையறுக்கப்பட்ட பெத்தேகம வயம்ப சுவசக்தி ஆதாரமன்ற கூட்டுறவுச் சங்கம் | 2016.11.16 | குளியாபிட்டிய |

**சிலாபம் பிரிவு**

| | | | | |
|---|---|---|---|---|
| 82 | சிலா/494 | வரையறுக்கப்படாத மூதுகட்டுவ சக்தி சிக்கன மற்றும் கடன் கொடுக்கல் வாங்கல் கூட்டுறவுச் சங்கம் | 2016.04.06 | சிலாபம் |
| 83 | சிலா/481 | வரையறுக்கப்படாத மானுவங்கம சிக்கன மற்றும் கடன் கொடுக்கல் வாங்கல் கூட்டுறவுச் சங்கம் | 2016.04.06 | சிலாபம் |
| 84 | வமா/நவ/9 | வரையறுக்கப்பட்ட வெலேவெவ தெற்கு நிஜபிம திரியபெரட்ட கூட்டுறவுச் சங்கம் | 2016.04.06 | சிலாபம் |
| 85 | வமா/பு/நா/1 | வரையறுக்கப்பட்ட நாத்தாண்டிய தம்மஸ்சர மத்திய மகா வித்தியாலய பாடசாலை கூட்டுறவுச் சங்கம் | 2016.04.06 | சிலாபம் |
| 86 | சிலா/520 | வரையறுக்கப்படாத லுனுவில சிக்கன மற்றும் கடன் கொடுக்கல் வாங்கல் கூட்டுறவுச் சங்கம் | 2016.04.12 | சிலாபம் |
| 87 | சிலா/643 | வரையறுக்கப்பட்ட வெல்லங்கரே விவசாய பொருட்களை உற்பத்தி செய்பவர்களின், விற்பனை செய்பவர்களின் கூட்டுறவுச் சங்கம் | 2016.04.26 | சிலாபம் |
| 88 | NT 111 | வரையறுக்கப்பட்ட பொரலஸ்ஸ மட்பாண்ட தொழிலாளர்களின் கூட்டுறவுச் சங்கம் | 2016.04.29 | சிலாபம் |
| 89 | சிலா/555 | வரையறுக்கப்படாத ஊருலியாகார சிக்கன மற்றும் கடன் கொடுக்கல் வாங்கல் கூட்டுறவுச் சங்கம் | 2016.05.13 | சிலாபம் |
| 90 | சிலா/588 | வரையறுக்கப்படாத அம்பகந்தவில புனித ரோகுஸ் சிக்கன மற்றும் கடன் கொடுக்கல் வாங்கல் கூட்டுறவுச் சங்கம் | 2016.05.25 | சிலாபம் |
| 91 | சிலா/659 | வரையறுக்கப்பட்ட ஆவேமரியா கடற்றொழில் கூட்டுறவுச் சங்கம் | 2016.05.25 | சிலாபம் |
| 92 | சிலா/841 | வரையறுக்கப்பட்ட புத்தளம் மாவட்ட இறால் வளர்ப்பாளர்களின், ஏற்றுமதியாளர்களின் கூட்டுறவுச் சங்கம் | 2016.05.25 | சிலாபம் |
| 93 | வமா/பு/கரு/6 | வரையறுக்கப்பட்ட சுவசக்தி ஆதாரமன்ற தேநுவர மகளிர் கூட்டுறவுச் சங்கம் | 2016.05.31 | சிலாபம் |
| 94 | வமா/நவ/16 | வரையறுக்கப்பட்ட வெலேவெவ வடக்கு நிஜபிம திரியபெரட்ட கூட்டுறவுச் சங்கம் | 2015.12.22 | சிலாபம் |
| 95 | சிலா/668 | வரையறுக்கப்படாத புனித அந்தோனியார் ஐக்கிய பள்ளியவத்த கிராம உத்தியோகத்தர் பிரிவின் கடற்றொழில் கூட்டுறவுச் சங்கம் | 2016.06.30 | சிலாபம் |
| 96 | வமா/பு/மா/12 | வரையறுக்கப்பட்ட காக்குபடியாவ இசுறு சுவசக்தி மகளிர் கூட்டுறவுச் சங்கம் | 2016.06.30 | சிலாபம் |
| 97 | சிலா/505 | வரையறுக்கப்பட்ட வடிகமங்காவ சிக்கன மற்றும் கடன் கொடுக்கல் வாங்கல் கூட்டுறவுச் சங்கம் | 2016.07.27 | சிலாபம் |
| 98 | NWP/ CH/ AC/ 959 | வரையறுக்கப்பட்ட இறால்மடுவ கைத்தொழில் அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கம் | 2016.10.30 | சிலாபம் |
| 99 | சிலா/822 | வரையறுக்கப்பட்ட புத்தளம் மாவட்ட உடவெடியாமல் மற்றும் அழகு செடிகள் ஏற்றுமதிக்காக நடுகை செய்பவர்களின் கூட்டுறவுச் சங்கம் | 2016.10.27 | சிலாபம் |
| 100 | NWP/ CH/ AC/ 963 | வரையறுக்கப்பட்ட லிகிரியாகம ஐக்கிய சத்கார்ய சுவசக்தி கூட்டுறவுச் சங்கம் | 2016.11.17 | சிலாபம் |

கமல் அமரசிங்க
கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர்/பதிவாளர் (வடமேல்),

வடமேல் மாகாண கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களம்,
முதலாம் மாடி, மாகாண சபை கட்டடத் தொகுதி,
குருநாகல்.
2017 பெப்ரவரி 15

3-247

**வடமேல் மாகாண சபை**

**வடமேல் மாகாணத்தின் மாகாண சபையின் 2017 ஆம் ஆண்டின் ............ ஆம் இலக்க, வடமேல் மாகாண சுகாதார சேவை திணைக்களம் பற்றிய சாசனம்**

இங்கு கீழ் பிரசுரிக்கப்படும் வடமேல் மாகாணத்தின் மாகாண சபையின் 2017 ஆம் ஆண்டு இலக்கம் ..... கான வடமேல் மாகாண சுகாதார சேவை திணைக்களம் பற்றிய சாசனம் இத் திகதி தொடக்கம் முப்பது நாட்கள் கடந்ததன் பின்பு வடமேல் மாகாணத்தின் மாகாண சபைக்கு சமர்ப்பிக்கப்படுவது பற்றி இத்துடன் அறிவித்தல் விடுக்கின்றேன். இது சம்பந்தமாக எவர் ஒருவருக்கு இச் சாசனத்தில் உள்ளடங்கப்பட்டுள்ள ஏற்பாடுகள் பற்றி சமர்ப்பிப்பதற்கு ஏதாவதொரு விடயம் இருப்பின் அதனை அத் திகதிக்கு முன் எனக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

லக்ஷ்மன் வேண்டருவ,
அமைச்சர்
சுகாதார, தேசிய வைத்திய, சமூக நலன்புரி,
நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு சேவைகள்,
மகளிர் அலுவல்கள் மற்றும் சபை நடவடிக்கை
அமைச்சு (வடமேல் மாகாணம்).

வடமேல் மாகாண சுகாதார, தேசிய வைத்திய,
சமூக நலன்புரி, நன்னடத்தை மற்றும்
சிறுவர் பாதுகாப்பு சேவைகள், மகளிர் அலுவல்கள்
மற்றும் சபை நடவடிக்கை அமைச்சு,
3 ஆம் மாடி,
வடமேல் மாகாணசபை அலுவலகத் தொகுதி,
குருநாகல்.

**20..... ஆம் ஆண்டின் ..... ஆம் இலக்க சுகாதார சேவைகள் நியதிச்சட்டம்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 9 ஆம் அட்டவணையின் மாகாண சபைப் பட்டியலில் II ஆம் விடயமாகவுள்ள சுகாதார விடயத்திற்கு ஏற்புடையதான இந்த நியதிச்சட்டமானது வடமேல் மாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்தை முறையாக தாபித்து அதன் மூலம் மாகாண சுகாதார சேவையை மேம்படுத்தும் மற்றும் உறுதிப்படுத்தும் பொருட்டிலானதாகும்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வடமேல் மாகாண, மாகாண சபையினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாக.

1. இந்த நியதிச்சட்டம் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வடமேல் மாகாண, மாகாண சபையின் 20.... ஆம் ஆண்டின் ...... ஆம் இலக்க, சுகாதார சேவைகள் நியதிச்சட்டம் என அழைக்கப்படுவதோடு, மாகாண ஆளுநரின் அங்கீகாரம் கிடைக்கப்பெற்ற அத்தகைய தேதியிலிருந்து அல்லது ஆளுநரினால் விதித்துரைக்கப்படும் தேதியிலிருந்து நடைமுறைக்கு வருதலும் வேண்டும். சுருக்கப் பெயரும் நடை முறைக்கு வரும் தேதியும்.

2. இந்த நியதிச் சட்டத்தின் குறிக்கோள்கள் பின்வருமாறாகும் : குறிக் கோள்கள்.

(1) வடமேல் மாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்தை முறையாக தாபித்து அதன் மூலம் தேசிய கொள்கைகளுக்கு அமைவாக மாகாண சிகிச்சை மற்றும் நோய்த் தடுப்பு சுகாதார சேவைகள் வழங்கப்படுவதை உறுதிப்படுத்துதல்.

(2) திணைக்களத்தின் சேவைகளை வழுங்கும் பொருட்டு உதவுவதற்காக வைத்தியசாலைகள் அபிவிருத்திக் குழுக்களைத் தாபித்தல்

(3) வடமேல் சுகாதார அபிவிருத்தி நிதியத்தை தாபித்தல்

பாகம் I

**மாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்தை முறையாக தாபித்தல், அதன் கட்டமைப்பு, அதிகாரம் மற்றும் பொறுப்புகள்**

3. வடமேல் மாகாணத்திற்கான மாகாண சுகாதார சேவைகள் திணைக்களமானது (இதனகத்துப் பின்னர் மாகாண திணைக்களமென அழைக்கப்படும்) இந்த நியதிச்சட்டத்தின் மூலம் முறையாக தாபிக்கப்படுதல் வேண்டும். மாகாண சுகாதார சேவைகள் திணைக் களத்தை முறையாக தாபித்தல்.

4. (அ) மாகாண திணைக்களத்தினால் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் சுகாதாரம் என்னும் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சினதும் (இதனகத்துப் பின்னர் வரிசை அமைச்சென அழைக்கப்படும்) சுகாதார சேவைகள் பணிப்பாளர் அதிபதியினதும் தொழில்நுட்ப ஆலோசனை களின் மீது மாகாண சுகாதார செயலாளரின் நிருவாக ரீதியிலான ஆலோசனைகளுக்கு உட்பட்டு இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 9 ஆம் அட்டவணையின் மாகாண சபைப் பட்டியலில் II ஆம் விடயத்தின் கீழான பிரிவுகள் சார்பில் வடமேல் மாகாணத்தினுள் சுகாதார சேவைகள் வழங்கப்படும். கால்நடை வள அபி விருத்தித் திட்டம்.

(ஆ) மாகாண திணைக்களத்தினால் பின்வரும் துறைகளைத் தழுவி (அவற்றுக்கு வரையறுக்காது) சேவைகள் வழங்கப்படும். சேவைகளை வழங்குதல்.

* வைத்தியசாலைகளின் ஊடாக சேவை நாடுநர்களுக்கு தங்கியிருந்து பெற்றுக்கொள்ளும் நோய் முகாமைத்துவ சேவை.

* வைத்தியசாலைகள், ஆரம்ப மருத்துவ சிகிச்சைப் பிரிவுகள் மற்றும் சேவை நாடுநர்களுக்கான வெளிநோயாளர் பிரிவு மற்றும் கிளினிக் சேவை.

* சுகாதார மருத்துவ உத்தியோகத்தர் மற்றும் அவருடைய பதவியணியின் மூலம் சமூக சுகாதார சேவைகள், சூழல் சுகாதார சேவைகள்.

5. (1) மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளரானவர் (இதனகத்துப் பின்னர் மாகாண பணிப்பாளரென அழைக்கப்படும்) மாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்தின் தலைவராவார். மாகாண பணிப்பாளர் பதவியானது இலங்கைச் சுகாதார சேவையின் மருத்துவ சேவையில் சிரேட்ட நிருவாக தரத்தைச் சேர்ந்த மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரினால் இந்த சேவைப் பிரமாணக் குறிப்பு மற்றும் அதன் நடவடிக்கை முறைகளுக்கு உட்பட்டு வகிக்கப்படும். இந்த உத்தியோகத்தர் மாகாண செயலாளரின் நிருவாகத்தின் கீழும் சுகாதார சேவைகள் பணிப்பாளர் அதிபதியின் தொழில்நுட்ப வழிகாட்டல்களுக்கும் அமைவாக பதவிக்கான கடமைகளை நிறைவேற்றுதல் வேண்டும். மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளரின் பதவிக்கான அதிகாரம்.

(2) மாகாண பணிப்பாளருக்குரிய அத்தகைய ஏதேனும் அதிகாரங்களை திணைக்களத்தின் பொருத்தமான உத்தியோகத்தர்களுக்கு கையளிப்பதற்கு மாகாணப் பணிப்பாளருக்கு அதிகாரமுள்ளது.

(3) உரிய ஒருங்குவிதிகள் மற்றும் தரங்களுக்கு அமைவாக மாகாணத் திணைக்களத்தின் செயற்பாடுகளை மீள் திட்டமிடுதல் மற்றும் மீள் ஒழுங்குபடுத்தல் தொடர்பிலான அதிகாரம் மாகாண பணிப்பாளருக்கு உள்ளது.

6. சுகாதார சேவைகள் மாவட்டங்கள் ஒவ்வொன்றுக்கும் (இதனகத்துப் பின்னர் " மாவட்டம்" என அழைக்கப்படும்) நியமிக்கப்படும் மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் (இதனகத்துப் பின்னர் "மாவட்டப் பணிப்பாளர்" என அழைக்கப்படும்) உரிய மாவட்டத்தின் சுகாதார சேவைகளை வழங்குவது தொடர்பில் மாகாண பணிப்பாளருக்கு நேரடியாகப் பொறுப்புச் சொல்லல் வேண்டும். மாவட்ட சுகாதார சேவை பணிப்பாளர் பதவிகள் இலங்கைச் சுகாதார சேவையின் மருத்துவ சேவையின் சிரேஷ்ட நிருவாக தரத்தைச் சேர்ந்த மருத்துவ உத்தியோகத்தர் ஒருவர் இந்த சேவைப் பிரமாணக் குறிப்பு மற்றும் அதன் நடவடிக்கை முறைகளுக்கு உட்பட்டு வகிக்கப்படுதல் வேண்டும். மாவட்ட சுகாதார சேவை பணிப்பாளர்

7. (1) இந்த நியதிச் சட்டத்தின் நோக்கங்களுக்காக மாகாணப் பணிப்பாளருக்கு, மாவட்டப் பணிப்பாளர்களுக்கு மற்றும் இந்தப் பணிப்பாளர் ஒருவரினால் சட்டபூர்வமாக அதிகாரம் கையளிக்கப்பட்டுள்ள சிரேட்ட மட்டத்தைச் சேர்ந்த உத்தியோகத்தர் ஒருவர் மாகாண திணைக்களத்தின் எந்தவொரு நிறுவனத்திற்கும் சென்று பரிசோதிப்பதற்கான தத்துவம் உள்ளது. சுகாதார சேவை நிறுவனங்களை பரிசீலிக்கும் தத்துவம்.

(2) அத்தகைய உத்தியோகத்தர் ஒருவரினால் சேவை நாடுநர்களின் தனிப்பட்ட மற்றும் அந்தரங்கம் தொடர்பிலான உரிமையையும் அதற்கான ஒழுங்கு முறையையும் மீறுதலாகாது. இந்த உத்தியோகத்தர்களுக்கு நீதிமன்ற கட்டளையொன்று அல்லது மருத்துவ ஒழுக்கநெறிக் குழுவின் அனுமதியின்றி சேவை நாடுநர்களின் தனிப்பட்ட சுகாதார தகவல் அடங்கிய ஆவணங்களைப் பெற்றுக் கொள்வதற்கோ பரிசீலிப்பதற்கோ அதிகாரம் கிடைக்கப் பெறமாட்டாது.

8. மாகாணப் பணிப்பாளரினால் மாகாணத்திற்குரியதாக முன்னைய பஞ்சாங்க ஆண்டின் சுகாதார நிலைமை பற்றிய அறிக்கையொன்றை அடுத்த பஞ்சாங்க ஆண்டினுள் மாகாண சுகாதார செயலாளருக்கு சமர்ப்பித்தல் வேண்டும். இந்த அறிக்கைக்கு முன்னைய ஆண்டிற்கான சுகாதார சேவை வழங்குகையின் சார்பு நிலைமை மற்றும் அதன் குறைபாடுகள் தொடர்பிலான புள்ளி விபரங்கள், அது தொடர்பிலான அவருடைய அவதானிப்புரைகள் மற்றும் சிபாரிசுகள் என்பன உள்ளடங்குதல் வேண்டும். மாகாண சுகாதார நிலைமை பற்றிய ஆண்டறிக்கை.

9. (1) மாகாண சுகாதார திணைக்களத்தினால் மாகாணத்தில் உள்ள உள்ளூராட்சி நிறுவனங்களின் அதிகாரப் பிரதேசங்களில் நிறைவேற்றும் சுகாதாரம் சார்ந்த பணிகள் தொடர்பிலான சேவைகளுக்கு தொழில்நுட்ப ஆலோசனைகளையும் வழிகாட்டல்களையும் வழங்குதல் வேண்டும். உள்ளூராட்சி நிறுவனங்களினால் வழங்கப்படும் சுகாதாரம் சார்ந்த சேவைகள்.

(2) மாகாண சுகாதாரத் திணைக்களத்தினால் தரவுகள், விபரங்கள் அல்லது தகவல்கள் உள்வாங்கும், புலனாய்வு செய்யும் அல்லது களஞ்சியப்படுத்தும் தகவல் முறைமைகளுக்குத் தேவையான தரவுகள், விபரங்கள் அல்லது தகவல்கள் மாகாணத்திலுள்ள சகல உள்ளூராட்சி நிறுவனங்களிலிருந்தும் பெற்றுக்கொள்தல் வேண்டும்.

10. மாகாணத் திணைக்களத்தின் நிதியாண்டாவது பஞ்சாங்க ஆண்டாக வேண்டும். மாகாணத் திணைக்களத்தின் நிருவாகம் மற்றும் அபிவிருத்தி பணிகள் மாகாண சபை நிதி மூலம் ஒதுக்கப்படும் நிதி ஏற்பாடுகள், தேவைப்படும் சந்தர்ப்பத்தில் சமர்ப்பிக்கப்படும் குறைநிரப்பு மதிப்பீடுகள், உரிய வரிசை அமைச்சுக்களின் நிதி ஏற்பாடுகள் மற்றும் ஏனைய தோற்றுவாய்களிலிருந்து கிடைக்கப் பெறும் நிதி ஏற்பாடுகள் என்பவற்றின் மூலம் செய்யப்படலாம். நிதி நடவடிக்கைகள்.

11. மாகாண திணைக்களத்தினால் அதன் நிதி நடவடிக்கைகள் யாவும் வடமேல் மாகாண நிதி ஒழுங்குவிதிக் கோவைக்கு அமைவாக மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.

பாகம் II

## வைத்தியசாலைகள் மற்றும் ஆரம்ப மருத்துவ சிகிச்சைப் பிரிவுகள் தொடர்பிலான அபிவிருத்திக் குழுக்கள்

12. திணைக்களத் தலைவரானவருக்கு அவருடைய வைத்தியசாலை அல்லது ஆரம்ப மருத்துவ சிகிச்சைப் பிரிவுகள் சார்பில் அபிவிருத்திக் குழுக்களைத் தாபிப்பதற்கான தத்துவமுள்ளது. அபிவிருத்திக் குழுக்களைத் தாபித்தல்.

13. (1) அமைப்புக்கள் மற்றும் பொதுமக்களின் பங்களிப்பு மூலம் மாகாணத் திணைக்களத்தில் உள்ள வைத்தியசாலை அல்லது ஆரம்ப மருத்துவ சிகிச்சைப் பிரிவுகளின் பௌதிக அபிவிருத்தி மற்றும் மறுசீரமைப்புக்கு ஒத்தாசை நல்குவது அபிவிருத்திக் குழுவொன்றின் குறிக்கோளாகும் அபிவிருத்திக் குழுவின் நோக்கம்.

(2) சுகாதார சிகிச்சை சேவைகள் உட்பட நிறுவனத்தின் உள்ளக நிருவாக நடவடிக்கைகளில் இந்தக் குழு தலையிடலாகாது.

14. திணைக்களத் தலைவராகவுள்ள மருத்துவ உத்தியோகத்தர் உத்தியோக பூர்வமாக குழுவின் உறுப்பினராகவும் குழுவின் தலைவராதலும் வேண்டும். அபிவிருத்திக் குழுவின் கட்டமைப்பு.

15. குழுவின் உறுப்பினர் ஒருவரை செயலாளராக குழுவானது நியமித்துக் கொள்தல் வேண்டும்.

16. குழுவுக்கு பெயர் குறித்து நியமிக்கப்படும் உறுப்பினர் ஒருவரின் பதவிக்காலம் இரண்டு வருடகாலத்திற்கு வரையறுக்கப்படும்

17.

18. (1) ஆரம்ப வைத்தியசாலையினதும் பிரதேச வைத்தியசாலையினதும் குழுவின் கட்டமைப்பு பின்வருமாறாகும்.

(2) உரிய பிரதேசத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் மாகாண சபை உறுப்பினர்கள், உள்ளூராட்சி நிறுவனங்களின் தலைவர்கள் மற்றும் பிரதேச செயலாளர் இந்தக் குழுவின் போசகர்களாக உத்தியோகபூர்வமாக நியமிக்கப்படுவர்.

(3) குழுவுக்கு பின்வருவோர் நியமிக்கப்படுதல் வேண்டும் :-

உத்தியோகபூர்வமாக நியமிக்கப்படும் உறுப்பினர்கள் -
* வைத்தியசாலையின் பிரதான மருத்துவ உத்தியோகத்தர்;
* உரிய பிரதேசத்தின் சுகாதார மருத்துவ உத்தியோகத்தர்;
* உரிய பொலிஸ் நிலையத்தின் நிலைய பொறுப்பு உத்தியோகத்தர்.

பெயர்குறித்து நியமிக்கப்படும் உறுப்பினர்கள்-
* வைத்தியசாலையின் பதவியணியைச் சேர்ந்த பல்வேறுபட்ட சேவை வகுதிகளிலிருந்து மூன்று உறுப்பினர்கள் (தமது பணியாட்டொகுதியினருடன் கலந்துரையாடி வைத்தியசாலையின் தலைவரினால் தெரிவு செய்யப்படுவர்)
* பிரதேசத்தில் சுகாதாரம் மற்றும் சமூக சேவை செயற்பாடுகளில் ஈடுபடும் மூவர்;
* பிரதேசத்திலுள்ள அரசாங்க நிறுவனங்களில் சேவை புரிந்து கொண்டிருக்கும் பதவி நிலைத்தர உத்தியோகத்தர்கள் இருவர்.

19. (1) ஆரம்ப மருத்துவ சிகிச்சைப் பிரிவுக் குழுவின் கட்டமைப்பு பின்வருமாறாதல் வேண்டும்.

(2) உரிய உள்ளூராட்சி நிறுவனத் தலைவர் மற்றும் உரிய பிரதேசத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் உள்ளூராட்சி உறுப்பினர்கள் குழுவின் போசகர்களாக உத்தியோகபூர்வமாக நியமிக்கப் படுவர்

(3) குழுவுக்கு பின்வருவோர் நியமிக்கப்படுதல் வேண்டும் :-

உத்தியோகபூர்வமாக நியமிக்கப்படும் உறுப்பினர்கள் -
* வைத்தியசாலையின் பிரதான மருத்துவ உத்தியோகத்தர்
* உரிய பிரதேசத்தின் சுகாதார மருத்துவ உத்தியோகத்தர்
* உரிய கிராம உத்தியோகத்தர்.

பெயர்குறித்து நியமிக்கப்படும் உறுப்பினர்கள்-
* வைத்தியசாலையின் பதவியணியைச் சேர்ந்த பல்வேறுபட்ட சேவை வகுதிகளிலிருந்து மூன்று உறுப்பினர்கள் (தமது பணியாட்டொகுதியினருடன் கலந்துரையாடி வைத்திய சாலையின் தலைவரினால் தெரிவு செய்யப்படுவர்) ;
* பிரதேசத்தில் சுகாதாரம் மற்றும் சமூக சேவை செயற்பாடுகளில் ஈடுபடும் மூவர்;
* கிட்டிய மத வழிபாட்டு நிலையங்களை பிரதிநிதித்துவப்படுத்திய மத குருமார்கள் இருவர்;
* பிரதேசத்திலுள்ள அரசாங்க நிறுனங்களில் சேவை புரிந்து கொண்டிருக்கும் பதவி நிலைத்தர உத்தியோகத்தர் இருவர்.

20. ஒவ்வொரு பஞ்சாங்க ஆண்டும் பொதுச் சபைக் கூட்டத்திற்கான (வருடாந்த அல்லது விசேட) அறிக்கைகளையும் கணக்கறிக்கைகளையும் குழுவினால் மாவட்ட பணிப்பளருக்கு குழுவின் செயலாளரினதும் தலைவரினதும் ஒப்பந்தங்களுடன் அடுத்துவரும் ஆண்டின் மாச்சு மாதம் 31 ஆந் திகதிக்கு முன்னர் கிடைப்பதற்கு ஆவண செய்தல் வேண்டும். பொதுக் கூட்டமும் கணக்கறிக்கையும்

பாகம் III

## வடமேல் மாகாண சுகாதார அபிவிருத்தி நிதியம்

*நிதியத்தை தாபித்தல்*

21. வடமேல் மாகாண சுகாதார அபிவிருத்தி நிதியம் (இதனகத்துப் பின்னர் 'நிதியம்' என அழைக்கப்படும்) என்னும் பெயரில் நிதியமொன்றை ஆரம்பித்து பேணுதல் வேண்டும்.

*நம்பிக்கை பொறுப்புச் சபை*

22. (1) நிதியத்தின் நிருவாகம், முகாமைத்துவம், கட்டுப்பாடு என்பன இதன் மூலம் தாபிக்கப்படும் வடமேல் மாகாண சுகாதார அபிவிருத்தி நிதியத்தின் நம்பிக்கை பொறுப்புச் சபைக்கு (இதனகத்துப் பின்னர், 'நம்பிக்கை பொறுப்புச் சபை' என அழைக்கப்படும்) கையளிக்கப்படும்.

(2) நம்பிக்கை பொறுப்புச் சபையானது உத்தியோகபூர்வமாக பின்வரும் உத்தியோகத்தர்களை கொண்டிருத்தல் வேண்டும்.

* மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர்
* பிரதிப் பிரதான செயலாளர் (வடமேல் மாகாணம்)
* மாகாணப் பணிப்பாளர்
* மாவட்டப் பணிப்பாளர்கள்
* மகாண அமைச்சின் கணக்காளர்
* மாகாண திணைக்களத்தின் பிரதான கணக்காளர்
* மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தின் நிபுணத்துவ சமூக மருத்துவர் (திட்டமிடல்)
* மாகாண அமைச்சின் பிரதிப் பணிப்பாளர் (திட்டமிடல்)

(3) நிதியத்தின் தலைவர், செயலாளர், பொருளாலர் ஆகிய பதவிகளுக்கு முறையே மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர், மாகாணப் பணிப்பாளர், மாகாணத் திணைக்களத்தின் பிரதான கணக்காளர் உத்தியோகபூர்வமாக நியமிக்கப்படுதல் வேண்டும்.

(4) நம்பிக்கைப் பொறுப்பு சபையின் கூட்டத்திற்கான கூட்டநடப்பெண் நிதியத்தின் தலைவர் அல்லது செயலாளர் அடங்கலாக ஐந்து பேர்களாதல் வேண்டும்.

23. இந்த நிதியம் வடமேல் மாகாணத்தில் நிதி ஒழுங்குவிதிக்கு அமைவாக பேணப்படுதல் வேண்டும்.

*நிதியத்திற்கான வரவு*

24. ஆட்களிடமிருந்து நிறுவனங்கள் மற்றும் அமைப்புகளிடமிருந்து கிடைக்கும் நன்கொடைகள் நிதியத்திற்கு வரவு வைக்கப்படும் மாகாண சுகாதார மேம்பாட்டிற்காக மாகாண அமைச்சின் அல்லது மாகாண திணைக்களத்தின் தலையீட்டில் பல்வேறுபட்ட செய்பாடுகளின் மூலம் பெறப்படும் தொகையும் நிதியத்திற்கு வரவு வைக்கப்படுதல் வேண்டும்.

*நிதியத்தின் நிதி ஏற்பாடுகளை பயன்படுத்த கூடிய நோக்கங்கள்*

25. மாகாண பணிப்பாளரின் சிபாரிசுக்கும் நம்பிக்கைப் பொறுப்பு சபையின் தலைவரின் அங்கீகாரத்துக்கும் உட்பட்டு நிதியத்துக்குரிய நிதிகள் பின்வரும் எந்தவொரு நோக்கத்திற்காகவும் பயன்படுத்துதல் சபையின் பொறுப்பாதலும் வேண்டும். இருந்த போதிலும் ஏதேனும் திட்டவட்டமான பணியொன்று சார்பில் நன்கொடை கிடைக்கப்பெற்றவிடத்து அத்தகைய நன்கொடைகள் நடைமுறை சாத்தியமான உச்ச பயன் பெறும் விதத்தில் இந்த நோக்கங் களுக்காகவே பயன்படுத்துவதனை உறுதி செய்தல் வேண்டும்.

(i) மாகாணத் திணைக்களத்தின் வைத்தியசாலையொன்றின், சுகதார மருத்துவ உத்தியோகத்தர் அலுவலக மொன்றின் அல்லது ஆரம்ப மருத்துவ சிகிச்சைப் பிரிவொன்றின் பௌதிக வளங்களின் அபிவிருத்திக்கும் உட்கட்டமைப்பு வசதிகளை வழங்கவதற்கும்

(ii) மாகாணத் திணைக்களத்தின் உத்தியோகத்தர்களினால் மேற்கொள்ளப்படும் மாகாணத்திற் குரிய ஆராய்ச்சி மேம்பாட்டிற்கும் அவர்களுடைய தொழில்சார் அறிவு மற்றும் ஆற்றலை விருத்தி செய்வதற்கும்

(iii) மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர்களினால் சிபாரிசு செய்யப்படும் மாகாண மக்களுக்கு விசேடமாக பாதிக்கும் நோய்களைத் தடுப்பதற்கும் சுகாதார மேம்பாட்டு நிகழ்ச்சித் திட்டங் களுக்கும்.

26. நிதியத்திற்குரிய நிதிகள் அரசாங்கத்திற்குச் சொந்தமான வங்கியொன்றில் மாத்திரம் வைப்புச் செய்யப்படுதல் வேண்டும். நிதியத்தின் நிதிகளை வைப்புச் செய்தல்.

27. நம்பிக்கை பொறுப்புச் சபையின் பொருளாலர் நிதியத்தின் வருமானங்கள் மற்றும் செலவுகள் தொடர்பில் முறையாக கணக்குகளை பேணுதல் வேண்டும். நிதியத்தின் கணக்கும் கணக்காய்வும்

பாகம் IV

**ஒழுங்குவிதிகளை ஆக்குதல்**

28. இந்த நியதிச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையான விடயங்களுக்குரியதாக ஒழுங்குவிதிகளை விதிப்பதற்குத் தேவைப்படுமிடத்து மாகாணப் பணிப்பாளரினாலும் மாகாண சுகாதார அமைச்சின் செயலாளரினாலும் சிபாரிசு செய்யப்படும் ஒழுங்கு விதிகளை மாகாண அமைச்சரினால் முறையாக விதிக்கப்படுதல் வேண்டும். ஒழுங்கு விதிகளை ஆக்குதல்

29. இந்த பிரிவின் கீழ் மாகாண சபையினால் அங்கீகரிக்கப்பட்ட ஒழுங்கு விதிகள் அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட வேண்டுமென்பதோடு அவ்வாறு பிரசுரிக்கப்பட்ட திகதியிலிருந்து அல்லது வர்த்தமானியில் விதித்துரைக்கப்படும் பின்னைய திகதியொன்றிலிருந்து இந்த ஒழுங்கு விதிகள் நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

பாகம் V

**இடைக்கால ஏற்பாடுகள்**

30. மாகாணத் திணைக்களத்தின் கீழ் எடுக்கப்படும் நிறுவனங்கள் இந்த நியதிச் சட்டம் நடைமுறைக்கு வரும் திகதியன்றுக்கு முன்னைய திகதியன்றில் அங்கீகரிக்கப்பட்ட பதவிகளில் முறையான நியமனங்களை வகிக்கும் சகல பதவியணியினரும் அன்றைய திகதியிலிருந்தும் அன்றைய திகதியின் பின்னர் அவர்களுடைய நியமன ஏற்பாடுகளுக்கும் சேவைப் பிரமாணக் குறிப்புகளுக்கும் அமைவாக இந்த நியதிச்சட்டத்தின் கீழ் செயலாற்றும் உத்தியோகத்தர்களாக ஊழியர்கள் கருதப்படுவர். இடைக்கால ஏற்பாடுகள்

31. இந்த நியதிச்சட்டம் நடைமுறைக்கு வரும் திகதியன்றுக்கு வரும் முன்னைய திகதியன்றில் மாகாண திணைக்களத்தின் கீழ் இயங்கிய சகல நிறுவனங்களும் அவற்றின் நிலையான மற்றும் நிலையற்ற சொத்துக்களும் அன்றைய திகதியிலிருந்து இந்த நியதிச் சட்டத்தின் கீழ் முறையாக தாபிக்கப்பட்ட மாகாணத் திணைக்களத்துக்கு கையளிக்கப்பட்டுள்ளதாக கருதப்படும்.

பாகம் VI

***பிற***

32. இந்த நியதிச்சட்டத்தின் சிங்கள, தமிழ், ஆங்கில உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும். ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் பொருள் கோடல்.

33. இந்த நியதிச்சட்டத்தில் சந்தர்ப்பம் வேறுவகையாகத் தேவைப்படுத்தினாலன்றி–
"மாகாண அமைச்சர்" என்னும் போது வடமேல் மாகாண மாகாண சபையின் சுகாதாரம் என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சர் எனவும்.

"மாகாண அமைச்சு" என்னும் போது வடமேல் மாகாண மாகாண சபையின் சுகாதாரம் என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சு எனவும்.

"வரிசை அமைச்சு" என்னும் போது இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் சுகாதாரம் என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சு எனவும்.

''மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர்'' என்னும் போது வடமேல் மாகாண மாகாண சபையின் சுகாதாரம் என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சின் செயலாளர் எனவும்.

''மாகாணத் திணைக்களம்'' என்னும் போது வடமேல் மாகாணத்தின் சுகாதார சேவைகள் திணைக்களம் எனவும்.

''மாகாணப் பணிப்பாளர்'' என்னும் போது வடமேல் மாகாணத்தின் சுகாதார சேவைகள் திணைக்களத்தின் பணிப்பாளர் எனவும்.

''மாவட்டப் பணிப்பாளர் '' என்னும் போது மாகாண மட்டத்தில் மாகாணத்தில் ஒவ்வொரு சுகாதார சேவை மாவட்டத்திலும் சுகாதார சேவைகளின் நிருவாகத்திற்குப் பொறுப்பான மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் எனவும்.

''ஆவணங்கள்'' என்னும் போது கடதாசி ஆவணங்கள் மாத்திரமன்றி மின்னனு ஊடகங்களிலுள்ள ஆவணங்கள், தரவுகள், தரவுச் சேர்மங்கள் மற்றும் தகவல்கள் எனவும்.

''சிற்றுண்டிச்சாலை'' என்னும் போது உணவு வகைகளை கொள்வனவு செய்வதற்கும் வெளியிலிருந்து கொண்டுவரும் அல்லது அந்த இடத்தில் கொள்வனவு செய்யும் உணவுகளை மேலதிக பணம் செலுத்தாமல் நுகர்வதற்கு வசதியளிக்கப்பட்டுள்ள இடம் எனவும்.

பொருள்படும்.

*03-296/1*

---

**வடமேல் மாகாண சபை**

## வடமேல் மாகாணத்தின் மாகாண சபையின் 2017 ஆம் ஆண்டின் ..................... ஆம் இலக்க வடமேல் மாகாண ஆயுர்வேத திணைக்களம் பற்றிய சாசனம்

இங்கு கீழ் பிரசுரிக்கப்படும் வடமேல் மாகாணத்தின் மாகாண சபையின் 2017 ஆம் ஆண்டின் .............. ஆம் இலக்கம் வடமேல் மாகாண ஆயுர்வேத திணைக்களம் பற்றிய சாசனம் இத் திகதி தொடக்கம் முப்பது நாட்கள் கடந்ததன் பின்பு வடமேல் மாகாணத்தின் மாகாண சபைக்கு சமர்ப்பிக்கப்படுவது பற்றி இத்துடன் அறிவித்தல் விடுக்கின்றேன். இது சம்பந்தமாக எவர் ஒருவருக்கு இச் சாசனத்தில் உள்ளடங்கப்பட்டுள்ள ஏற்பாடுகள் பற்றி சமர்ப்பிப்பதற்கு ஏதாவதொரு விடயம் இருப்பின் அதனை இத் திகதிக்கு முன் எனக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

லக்ஷ்மன் வேண்டருவ,
அமைச்சர்
சுகாதார, தேசிய வைத்திய, சமூக நலன்புரி,
நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு சேவைகள்,
மகளிர் அலுவல்கள் மற்றும் சபை நடவடிக்கை
அமைச்சு (வடமேல் மாகாணம்).

வடமேல் மாகாண சுகாதார, தேசிய வைத்திய,
சமூக நலன்புரி, நன்னடத்தை மற்றும்
சிறுவர் பாதுகாப்பு சேவைகள், மகளிர் அலுவல்கள்
மற்றும் சபை நடவடிக்கை அமைச்சு,
3 ஆம் மாடி,
வடமேல் மாகாணசபை அலுவலகத் தொகுதி,
குருநாகல்.

**வடமேல் மாகாண, மாகாண சபையின் 2017 ஆம் ஆண்டின் ..................... ஆம் இலக்க**
**வடமேல் மாகாண ஆயுர்வேத மற்றும் சுதேச மருத்துவ நியதிச்சட்டம்**

வடமேல் மாகாணத்தில் சுதேச மருத்துவ பணிகளை நடைமுறைப்படுத்துவதற்கும் ஆயுர்வேத மருந்தகங்களையும் மருத்துவமனைகளையும் தாபித்தல். அத்தகைய மருந்தகங்களுக்கும் மருத்துவமனைகளுக்கும் நிதியுதவி வழங்குதல், மூலிகை பூங்காக்களை உருவாக்கி பேணுதல், இந்தப் பணிகளை வெற்றி கொள்வதற்குத் தேவையான கொள்கைகளை வகுத்தல், திட்டமிடுதல், நடைமுறைப்படுத்துதல் மற்றும் கையாளுதல் போன்றவற்றுக்குத் தேவையான ஏற்பாடுகளைச் செய்யும் பொருட்டும் இவற்றுடன் தொடர்புள்ள இடைநேர் விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமானதொரு நியதிச்சட்டம்.

இங்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ள அளவுக்கு 1961 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்க ஆயுர்வேத சட்டமானது ஒவ்வாததாகும்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வடமேல் மாகாணத்தின் மாகாண சபையினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக.

01. இந்த நியதிச்சட்டம் வடமேல் மாகாண மாகாண சபையின் 2017 ஆம் ஆண்டின் ............. ஆம் இலக்க, வடமேல் மாகாண ஆயுர்வேத மற்றும் சுதேச மருத்துவ நியதிச்சட்டம் என அழைக்கப்படுவதோடு, வடமேல் மாகாண ஆளுநரின் அங்கீகாரம் கிடைக்கப் பெற்ற தேதியிலிருந்து நடைமுறைக்கு வருதலும் வேண்டும். *சுருக்கப் பெயரும் நடைமுறைக்கு வரும் தேதியும்*

02. இந்த நியதிச் சட்டத்தின் நோக்கம் பின்வருமாறாகும். *நிதிச் சட்டத்தின் நோக்கம்*

1. வடமேல் மாகாண ஆயுர்வேத திணைக்களத்தைத் தாபிப்பதற்கும் நடாத்திச் செல்வதற்கும் உரியதான ஏற்பாடுகளைச் செய்தல்.

2. தேசிய கொள்கைகளுக்கு அமைவாக வடமேல் மாகாண சுதேச மருத்துவ பணிகளுக்குரிய கொள்கைகளை வகுத்தல், திட்டமிடுதல், நடைமுறைப்படுத்துதல், கையாளுதல்.

3. சுதேச மருத்துவ பணிகளுக்கான ஆலோசனைச் சபையொன்றை தாபித்தலும் மாகாணம் சார்ந்த மருத்துவ ஆராய்ச்சி வசதிகளை வழங்குதலும்

4. ஆயுர்வேத மருத்துவமனைகளின் அபிவிருத்திக் குழுக்கள் மற்றும் ஆயுர்வேத பாதுகாப்பு சபைகளைத் தாபித்தலும் நடாத்திச் செல்லுதலும்.

5. ஆயுர்வேத சித்த, யுனானி மற்றும் பாரம்பரிய ஆகிய சுதேச மருத்துவ முறைகளை வடமேல் மாகாணத்தினுள் நடாத்திச் செல்தல், பாதுகாத்தல் மற்றும் மேம்படுத்துதல்.

6. ஆயுர்வேத மத்திய மருந்தகங்களையும் மருத்துவமனைகளையும் தாபித்தல், நடாத்திச் செல்தல் மற்றும் வசதிகளை ஏற்பாடு செய்தல்.

7. மூலிகை பூங்காக்களை உருவாக்குதல், சுதேச மற்றும் ஆயுர்வேத மருந்து உற்பத்தியும் அதற்காக உற்பத்திசாலைகளை பேணுதலும்.

8. சுதேச மருத்துவ பணிகளை மேம்படுத்துவதற்கும் ஒழுங்குறுத்துவதற்காகவும் அரசாங்க, பகுதி அரசாங்க, அரச சார்பற்ற நிறுவனங்கள், தொண்டர் அமைப்புகள் மற்றும் தனியாட்களை ஒருங்கிணைத்து செயற்பாட்டு ரீதியிலான பங்களிப்பைப் பெற்றுக் கொள்தல்.

பாகம் I

**மாகாண ஆயுர்வேத திணைக்களத்தைத் தாபித்தல்,**
**தத்துவங்கள் கட்டமைப்பு மற்றும் பொறுப்புகள்**

03. இந்த நியதிச்சட்டத்தின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக இதனகத்துப் பின்னர் "திணைக்களம்" என அழைக்கப்படும் 'வடமேல் மாகாண ஆயுர்வேத திணைக்களமொன்று தாபிக்கப்படுதல் வேண்டும். *மாகாண ஆயுர்வேத திணைக்களத்தைத் தாபித்தல்*

ஆணையாளரின் நியமனமும் திணைக் களத்தின் கட்டமைப்பும்

04. (1) இந்த நியதிச்சட்டத்தின் தத்துவங்கள், ஏற்பாடுகள் மற்றும் பணிகளை நடைமுறைப்படுத்துவதற்கான "மாகாண ஆயுர்வேத ஆணையாளர்" என அழைக்கப்படும் ஆயுர்வேத மருந்து சேவைப் பிரமாணக் குறிப்புக்கு அமைவாக தகைமைபெற்ற ஆயுர்வேத மருத்துவ உத்தியோகத்தர் ஒருவர் ஆயுர்வேத சட்டத்துக்கு அமைவாக நியமிக்கப்படுதல் வேண்டும்.

(2) ஆணையாளருக்கு ஒத்தாசை நல்கும் பொருட்டு புத்தளம் மற்றும் குருநாகல் ஆகிய இரு மாவட்டங் களுக்கும் தேவையான பிரதி ஆணையாளர்கள், உதவி ஆணையாளர்கள், ஆயுர்வேத மருத்துவ உத்தியோகத்தர்கள் மற்றும் ஏனைய பதவியினர்களையும் திணைக்கள பணியாட்டொகுதி கொண்டிருத்தல் வேண்டும்.

(3) இந்த நியதிச்சட்டத்தில் ஆணையாளருக்கு கையளிக்கப்படும் தத்துவங்கள் மற்றும் பணிகளை நிறை வேற்றுவதற்கு பிரதி ஆணையாளர்களுக்கு உதவி ஆணையாளர்களுக்கு சமூக சுகாதார மேற்பார்வை உத்தியோகத்தர்களுகுக்கு ஆயுர்வேத மருத்துவ உத்தியோகத்தர்களுக்கு சமூக சுகாதார மருத்துவ உத்தியோகத்தர்களுக்கு மற்றும் ஏனைய உத்தியோகத்தர்களுக்கு ஆணையாளரினால் அவருடைய தத்துவங்களை கையளிக்கலாம்.

(4) இந்த நியதிச்சட்டம் நடைமுறைக்குவரும் திகதியன்றில் மாகாண ஆயுர்வேத திணைக்களத்தின் திணைக்களம் சார்ந்த பதவிகளை வகிக்கின்ற சகல உத்தியோகத்தர்களும் ஊழியர்களும் அவர்கள் தற்போதுள்ள சேவை நிலைமையின் மீதே இந்த நியதிச்சட்டத்தின் கீழ் நியமிக்கப்பட்டவர்களாக கருதப்படுதல் வேண்டும்.

(5) இந்த நியதிச்சட்ட நோக்கங்களுக்காக நியமிக்கப்படும் சகல உத்தியோகத்தர்களும் தண்டனைச்சட்டக் கோவையின் வரைவிலக்கணத்துக்கு அமைவாக அரசாங்க உத்தியோகத்தர்களாக கருதப்படுதுலும்.

திணைக்களத்தின் பணிகள்

05. இந்த திணைக்களத்தின் கடமைகளும் பணிகளும் பின்வருவனவாதல் வேண்டும்.

(1) வருடாந்த செயற்பாட்டுத் திட்டம், வருடாந்த அபிவிருத்தித் திட்டம் என்பன தயாரிக்கப்பட்டதன் பின்னர் அங்கீகரிக்கப்பட்ட குறித்த அபிவிருத்தித் திட்டமும் செயற்பாட்டு திட்டமும் ஆகக்கூடிய வினைத் திறனுடன் நடைமுறைப்படுத்துதல்.

(2) மாகாண ஆயுர்வேத மருத்துவமனைகள், மாவட்ட ஆயுர்வேத மருத்துவமனைகள், ஆயுர்வேத ஆரம்ப மருத்துவமனைகள், கிராமிய ஆயுர்வேத மருத்துவமனைகள், ஆயுர்வேத மத்திய மருந்தகங்கள், ஆயுர்வேத சிகிச்கை நிலையங்கள், ஆயுர்வேத மேம்பாட்டு நிலையங்களை ஆரம்பித்தல், நிருவாகம், பேணுதல் அத்துடன் சிகிச்சை சேவைகளை வழங்குதல்

(3) பொது சுகாதார சேவைகளை நடாத்திச் செல்வதற்கும் மேம்படுத்துவதற்கும் தேவையான தாபனங்களை நிறுத்துதலும் பேணுதலும்.

(4) நோய் ஒழிப்புக்கான சுகாதார கல்வி, பொது சுகாதார சேவை பணிகளை நடைமுறைப்படுத்துதல்.

(5) நோயாளிகளுக்கு தரம்மிக்க, வினைத்திறன் வாய்ந்த மற்றும் பயனுள்ள சேவையினை வழங்குவதற்கு உறுதி செய்தல்.

(6) பாரம்பரிய சுதேச மருத்துவ முறைகளை பாதுகாத்தல், மேம்படுத்துதல், பிரபல்யப்படுத்துதல், விசேட சந்தர்ப்பங்களில் விசேட ஆற்றலுள்ள பாரம்பரிய சுதேச மருத்துவர்களின் சேவையைப் பெற்றுக் கொள்தல்.

(7) சுதேச மற்றும் ஆயுர்வேத மருந்து உற்பத்திக்காக மூலிகை மரச் செய்கை, மூலிகை பூங்காக்கள், மூலிகை நாற்றுக்களை பேணுதல் பராமரிப்பு தேவையான வசதிகள் மற்றும் ஆலோசனைகளை வழங்குதல், சுதேச மற்றும் ஆயுர்வேத மருந்து உற்பத்தியை ஊக்குவித்தல் மற்றும் ஒழுங்குறுத்துதல்.

(8) உள்ளூராட்சி திணைக்களத்தைச் சாராத சுதேச மருத்துவ துறைக்குரிய மருத்துவமனைகள், மருந்தகங்கள், மருந்து உற்பத்திச் சாலைகள் அல்லது சுதேச மருத்துவமுறைக்குள் வரும் இரசாயனக்கூடங்கள், சேவைகளை வழங்கும் நிலையங்கள் அல்லது இடைநேர்விளைவான நிறுவனங்கள் பதிவு செய்தல்,

மருந்துக் களஞ்சியசாலைகள் மற்றும் மருந்துகள் விற்பனை நிலையங்கள் பதிவு செய்தல் என்பவற்றுக்குத் தேவையான சிபாரிசுகளை வழங்குதல், மேற்பார்வை செய்தல், தேவையான சந்தர்ப்பங்களில் உரிய நிறுவனங்களுக்கு உள்நுழைதல் பரிசோதனை செய்தல்.

(9) ஆயுர்வேத மருத்துவமனை அபிவிருத்திக் குழுக்கள் மற்றும் ஆயுர்வேத பாதுகாப்பு சபைகளை தாபித்து நடாத்திச் செல்தல்.

(10) ஆயுர்வேத மருத்துவமனை அபிவிருத்தி குழுக்கள் மற்றும் ஆயுர்வேத பாதுகாப்பு சபைகள் மூலம் முன்வைக்கப்படும் பிரேரிப்புக்களுக்கு அங்கீகாரம் வழங்குவதற்காக பரிசீலனை செய்தல்.

(11) சுதேச மருத்துவ சேவையை வழங்குவதற்காக கட்டணம் அறிவிடப்படும். காவலறைகளை பேணுதல். இந்தக் கட்டணங்களிலிருந்து ஈட்டிக் கொள்ளப்படும் வருமானம் மாகாணசபை நிதியத்துக்கு வரவு வைத்தல்.

(12) உள்நாட்டு, வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளுக்கு சுதேச மருத்துவ முறைகளை அறிமுகப் படுத்துதலும் பிரபல்யப்படுத்துதல்.

(13) சுதேச மருத்துவ துறையின் மேம்பாட்டுக்குத் தேவையான அறிவு, எண்ணம் மற்றும் திறன் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்துதல்.

(14) பதிவு செய்யப்பட்ட சுதேச மருத்துவர்களுக்குத் தேவையான மருந்துகள் மற்றும் அபாயகரமான மருந்துகள் வழங்குதலும் சிபாரிசுகளை வழங்குதலும்.

(15) சுதேச மற்றும் ஆயுர்வேத மருந்து உற்பத்தியின் பொருட்டு உற்பத்தி முற்பணக் கணக்கொன்றை நடாத்திச் செல்தல்.

(16) ஆயுர்வேத துறையின் மேம்பாட்டுக்கும் தரம் வாய்ந்த நோயாளிகள் சிகிச்சை சேவைகளை நடாத்திச் செல்வதற்கும் தேவையான ஆராய்ச்சி பணிகளை நிறைவேற்றுவதற்காகவும் ஆயுர்வேத மாகாண ஆராய்ச்சி சபையொன்றைத் தாபித்து நடாத்திச் செல்லலாம்.

(17) சுதேச மருத்துவத்துறை மாணவர்களை பயிற்றுவிப்பதற்கு பல்கலைக்கழகங்களுடன் ஒன்றிணைந்து செய்முறை பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்துதல்.

(18) தேசிய தொழில் தேர்ச்சி (NVQ) மட்ட பயிற்சி பாடநெறிகளை நடாத்துதலும் சான்றிதழ் வழங்குதலும்.

(19) ஆயுர்வேத துறைக்குரிய தகவல் முறைமையொன்றை பேணுதலும் இற்றைப்படுத்துதலும்.

(20) உற்பத்தி செய்யப்படும் மருந்துகளின் தரத்தை பரிசோதிப்பதற்காக தரப் பிரிவொன்றை தாபித்தலும் அதற்குத் தேவையான வசதிகளை வழங்குதலும்.

06. (1) இந்த நியதிச்சட்டத்தின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள நோக்கங்களையும் பணிகளையும் நிறை வேற்றுவதற்குத் தேவையான தகவல்கள், அறிக்கைகள் ஆணையாளரினால் அல்லது அவரால் அதிகாரம் கையளிக்கப்பட்ட வேறு உத்தியோகத்தர் ஒருவரினால் ஏதேனும் நிறுவனமொன்றிட மிருந்து அல்லது ஆள் ஒருவரிடமிருந்து கோரப்பட்டால் அவர் அல்லது அந்த நிறுவனம் குறித்த தகவல்களை வழங்குதல் வேண்டும். மாவட்ட சுகாதார சேவைப் பணிப் பாளர்

(2) இந்த நியதிச்சட்டத்தின் பணிகளுக்காக ஆணையாளரினால் அல்லது அவரால் அதிகாரம் கையளிக் கப்படும் எவரேனும் உத்தியோகத்தர் ஒருவர் முன் அறிவித்தலின்றி அல்லது அறிவித்தலின்றி எந்த நேரத்திலும் வடமேல் மாகாணத்திலுள்ள சுதேச மருத்துவ நிலையங்களுக்கு சுதேச மருத்துவ சேவைகள் வழங்கும் நிறுவனமொன்றிற்குள் நுழைவதற்கும்

(அ) ஏதேனும் பரிசோதனையொன்றை விசாரணையொன்றை புலனாய்வொன்றைச் செய்வதற்கும்.
(ஆ) தேவையான ஆவணங்களை பரிசீலனை செய்வதற்கும் அல்லது தகவல்களை பெற்றுக் கொள்வதற்கும்.
(இ) தேவையான ஆவணங்களை கட்டுக்காப்பில் எடுப்பதற்கும் அதிகாரம் உள்ளது.
(ஈ) உள்ளூராட்சி நிறுவனமொன்றாகும்போது அதன் பிரதான நிறைவேற்று உத்தியோகத்தருக்கு அறிவித்தல் வேண்டும்.

(3) நீதிமன்றத்தின் அதிகாரம் தேவைப்படும் ஏதேனும் இரகசிய தகவல்கள் தவிர ஆவணங்கள் மற்றும் அறிக்கைகள் என்பனவற்றை பரிசீலனை செய்வதற்கு மேற்போந்த உத்தியோகத்தர்களுக்கு விசேடமாக அதிகாரம் கையளிக்கப்பட்டிருந்தாலொழிய, நீதிமன்ற அதிகாரம் தேவைப்படுமிடத்து ஏதேனும் நிறுவனமொன்றிலுள்ள நோயாளர் ஒருவரின் மருத்துவ அறிக்கைகளை பரிசீலனை செய்வதற்கு எவரேனும் ஆள் ஒருவருக்கு அதிகாரம் கையளிக்குமாறு இந்தப் பிரிவின் மேற்குறிப்பிட்ட ஏற்பாடுகளில் குறிப்பிடப்பட்டுள்ள எவருக்கும் இடமளிக்கப்பட்டதாக கருதப்படுதலாகாது அல்லது விளங்கிக் கொள்ளலாகாது.

## பாகம் II

## கொள்கைகளை வகுத்தலும் திட்டமிடுதலும்

கொள்கைகளை வகுத்தல்

07. தேசிய கொள்கைக்கு அமைவாக வடமேல் மாகாணத்தினுள் சுதேச மருத்துவ பணிகளுக்குரிய கொள்கைகளை வகுக்கும் பொறுப்பானது மாகாண அமைச்சுக்கு கையளிக்கப்பட்டுள்ளது. அதற்காக மாகாணத்தினுள் ஆயுர்வேத மருத்துவமனைகள், மத்திய மருந்தகங்கள் சார்பில் தாபிக்கப்பட்டுள்ள மருத்துவமனை அபிவிருத்தி குழுக்களினால் அரசாங்க, பகுதி அரசாங்க, அரசசார்பற்ற அமைப்பு சார்ந்த தொண்டர் அமைப்புகள் மற்றும் ஆட்களிடமிருந்து பிரேரிப்புகளைப் பெற்றுக் கொள்ளலாம்.

திட்டங்களை தயாரித்தலும் நடைமுறைப் படுத்தலும்

08. மாகாணத்தினுள் சனத்தொகை, உட்கட்டமைப்பு வசதிகள், சமூக மற்றும் ஏற்புடையதாகும் ஏனைய காரணிகள் மற்றும் தகுதிவிதிகளை அடிப்படையாகக் கொண்டு மாகாண ஆயுர்வேத திட்டங்கள் ஆயுர்வேத ஆணையாளரினால் தயாரிக்கப்பட்டு செயலாளரின் அங்கீகாரத்துக்காக வருடாந்தம் சமர்ப்பிக்கப்படுதலும் வேண்டும்.

சேவைகளை வழங்குதல்

09. மாகாண மக்களினது சுகாதாரம் மற்றும் துப்பரவேற்பாட்டு தொடர்பில் சுதேச மருத்துவ முறைகளை பயன்டுத்துவது சம்பந்தமாக பொது மக்களுக்கு அறியச் செய்வித்தல் அதன் சார்பில் மக்களின் விருப்பதை அதிகரிக்கச் செய்தல் பாரம்பரிய சுதேச மருத்துவ முறைகளை விருத்தி செய்தல் மற்றும் பாதுகாத்தல், ஆயுர்வேத மத்திய மருந்தகங்களைத் தாபித்தல் மற்றும் பேணுதல், மூலிகை பூங்காக்களை தாபித்தல் மற்றும் பேணுதல், சுதேச மருத்துவ முறைகளுக்குத் தேவையான மருந்து உற்பத்தி மற்றும் அதன் நோக்கங்களுக்காக அரசாங்க, அரசசார்பற்ற நிறுவனங்கள், தொண்டர் அமைப்புகள் மற்றும் ஆட்களின் பங்களிப்பை நேரடியாக அல்லது மறைமுகமாக பெற்றுக் கொள்வது அடங்கலாக சுதேச மருத்துவ பணிகள் உட்பட அது சார்ந்த சேவைகள் இந்த நியதிச் சட்டத்தின் நோக்கங்களுக்கும் ஏற்பாடுகளுக்கும் அமைவாக மாகாண சுதேச மருத்துவ அமைச்சினாலும் மாகாண ஆயுர்வேத திணைக்கள்த்தினாலும் வழங்கப்படுதல் வேண்டும்.

அமைச்சரின் தத்துவம்

10. இதனகத்துப் பின்னர் ''அமைச்சர்'' என அழைக்கப்படும் வடமேல் மாகாண சுதேச மருத்துவம் என்னும் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரினால் இந்த நியதிச்சட்டத்திலுள்ள நோக்கங் களையும் ஏற்பாடுகளையும் நடைமுறைப்படுத்துவதற்கு ஆலோசனைகளை வழங்குதல், வழிகாட்டுதல் மற்றும் கட்டளைகளை விதித்துரைக்கலாம்.

செயலாளரின் தத்துவம்

11. இந்த நியதிச்சட்டத்திலுள்ள ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்துவதற்காக அமைச்சரினால் காலத்துக்குக் காலம் வழங்கப்படும் கட்டளைகள், ஆலோசனைகள் மற்றும் வழிகாட்டல்கள் என்பவற்றின் கீழ் மாகாண ஆயுர்வேத சுதேச மருத்துவ கொள்கைகளுக்கு அமைவாக மாகாண சுதேச மருத்துவ கொள்கைகளை நடைமுறைப்படுத்துதல், கையாள்தல் மற்றும் கட்டுப்பாடு மாகாண சுதேச மருத்துவ அமைச்சின் செயலாளரினால் செய்யப்படுதல் வேண்டும்.

மேன்மை முறையீடு

12. இந்த நியதிச்சட்டத்திலுள்ள ஏற்பாடுகள் அல்லது அதன்கீழ் விதித்துரைக்கப்பட்ட கட்டளைகளின் கீழ் அல்லது எவதேனும் உத்தியோகத்தர் ஒருவரினால் செய்யப்பட்ட கட்டளையொன்று அல்லது தீர்மானமொன்று சம்பந்தமாக அமைச்சருக்கு மேன்முறையீடொன்றைச் செய்யலாம். அமைச்சரின் கட்டளையின் பிரகாரம் செயலாளரினால் அல்லது அவரினால் நியமனஞ் செய்யப்படும் உத்தியோகத்தர் ஒருவரினால் அல்லது விசாரணைக் குழுவொன்றினால் இது தொடர்பில் செய்யப்படும் விசாரணையின் பின்னர், குறித்த கட்டளை அல்லது தீர்மானம் உறுதிப்படுத்தப் படுவதற்கு அல்லது திருத்துவதற்கு அல்லது நிராகரிப்பதற்கு அமைச்சினால் முடியுமாதல் வேண்டும்.

மாவட்ட அலுவலகங் களைத் தாபித்தல்

13. புத்தளம் மற்றும் குருநாகல் ஆகிய இரண்டு மாவட்டங்களுக்கும் பிரதி அல்லது உதவி ஆணையாளர் அலுவலகங்களைத் தாபிக்கலாம்.

பாகம் III

**வடமேல் மாகாண ஆயுர்வேத மற்றும் சுதேச மருத்துவ ஆலோசனைச் சபை**

14. (1) சுதேச மருத்துவ கொள்கைகளை வகுத்தல், திட்டமிடுதல், நடைமுறைப்படுத்தல், கையாள்தல் உட்பட சுதேச மருத்துவ பொறுப்புக்களை நடைமுறைப்படுத்துவதை எளிதாக்குதல், உதவுதல் என்பன பொருட்டு 15 உறுப்பினர்களைக் கொண்ட இதனகத்துப் பின்னர் 'ஆலோசனை சபை' என அழைக்கப்படும் மாகாண தேசிய மருத்துவ ஆலோசனை சபையொன்று தாபிக்கப்படுதல் வேண்டும். மாகாண சுதேச மருத்துவம் என்னும் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சருக்குத் தேவையான ஆலோசனைகளை வழங்குவதற்காக இந்த ஆலோசனைச் சபையானது நியமிக்கப்படுவதோடு, மாகாண சுதேச மருத்துவம் என்னும் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சின் செயலாளரானவர் தலைவராகவும் மாகாண ஆயுர்வேத ஆணையாளர் செயலாளராகவும் செயலாற்றுதல் வேண்டும். நம்பிக்கை பொறுப்புச் சபை

(2) ஆலோசனை சபையின் ஏனைய உறுப்பினர்கள் பின்வருவோராவர்

(அ) வடமேல் மாகாண உள்ளூராட்சி ஆணையாளர்

(ஆ) வடமேல் மாகாண கல்விப் பணிப்பாளர்

(இ) வடமேல் மாகாண சட்டப்பிரிவின் பிரதிநிதியொருவர்

(ஈ) வடமேல் மாகாண சுதாதார சேவைகள் பணிப்பாளர்

(உ) ஆயுர்வேத காப்பு சபையின் மாவட்ட ஆயுர்வேத காப்பு சபைகளின் தலைவர்கள் இருவர்

(ஊ) மாகாணத்திலுள்ள நிருவாக மாவட்டங்களை பிரதிநிதித்துவப்படுத்தும் விதத்தில் அனுபவம்மிக்க சுதேச மருத்துவர்கள் இருவர்

(எ) சுதேச மருத்துவத் துறை தொடர்பில் அனுபவம் மிக்க பிரதிநிதிகள் இருவர்

(3) சந்தர்ப்பத்திற்கேற்றவாறு அரசாங்க அல்லது மாகாண அரசாங்க சேவையைச் சேர்ந்த உத்தியோகத்தர்களை இந்த குழுவுக்காக பெயர் குறிப்பிட்டு அழைக்கலாம்.

(4) மேல் (14) (2) ஆம் பிரிவில் (அ) முதல் (உ) வரையிலானவர்களுக்கு உத்தியோகபூர்வ ரீதியிலான உறுப்பினர்களாவர் உறுப்பினர்களின் நியமனம்

(5) மேல் (14) (2) ஆம் பிரிவில் (ஊ) மற்றும் (எ) என்பவற்றின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள அமைச்சரினால் நியமிக்கப்படும் உறுப்பினர்கள் இதனகத்துப் பின்னர் நியமிக்கப்பட்ட உறுப்பினர்களாக அழைக்கப்படுவர்.

(6) எவரேனும் ஆள் ஒருவர்.-

(அ) இலங்கை பிரசையொருவராக இல்லாதுவிடின் அல்லது இலங்கை பிரசையாக இருந்து முடிவுக்கு வந்திருப்பின்

அவர் சபையின் நியமிக்கப்பட்ட உறுப்பினர் ஒருவராக நியமிக்கப்படுவதற்கு அல்லது தொடர்ந்தும் இருப்பதற்கு தகைமையற்றவராவார்.

(ஆ) சபையில் நியமனஞ் செய்யப்பட்ட சகல உறுப்பினர்களும் அவர்கள் பதவியிலிருந்து கேட்டு விலகினால் அல்லது அமைச்சரினால் பதவியிலிருந்து நீக்கினால் தவிர மூன்று (03) வருட காலத்திற்கு அவர்களுடைய பதவிகளை வகிக்க வேண்டுமென்பதோடு அதற்காக மீண்டும் நியமிக்கவும்படலாம்.

(7) நோய்வாய்ப்பட்டதன் காரணமாக அல்லது இலங்கையில் இல்லாமல் இருப்பதன் காரணமாக அல்லது வேறு காரணமாக தனது பதவிக்கான பொறுப்புகளை நிறைவேற்றுவதற்கு எவரேனும் நியமிக்கப்பட்ட உறுப்பினர் ஒருவருக்கு இயலாதென சபையின் பெரும்பான்மை உறுப்பினர்கள் தீர்மானிக்கும் சந்தர்ப்பத்தில் அவருக்குப் பதிலாக செயலாற்றுவதற்கு வேறு ஆள் ஒருவர் அமைச்சரினால் நியமிக்கப்படலாம். உறுப்பினர்கள் சார்பில் உறுப்பினர் களை நியமித்தல்

(8) நியமனஞ் செய்யப்பட்ட உறுப்பினர் ஒருவர் தனது பதவியிலிருந்து கேட்டு விலகினால் அல்லது பதவியிலிருந்து நீக்கப்பட்ட சந்தர்ப்பத்தில் ஒருவரின் பதவிக்காலத்தில் எஞ்சியுள்ள காலப்பகுதிக்குள் பதவியினை வகிப்பதற்காக வேறு ஆள் ஒருவர் அமைச்சரினால் நியமிக்கப்படலாம்.

(9) சபையின் கூட்டங்களுக்காகவும் இந்தக் கூட்டங்களில் செயலாற்றுவதற்காகவும் உரிய நடவடிக்கை முறைகளை இந்த நியதிச்சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுக்கு உட்பட்டு சபையினால் ஆக்கலாம்.

*சபையின் நடவடிக் கைகள் இல்லா தொழியமாட்டா தென.*

(10) சபையில் ஏதேனும் வெற்றிடமொன்று நிலவுவதனால் அல்லது சபை நியமிக்கப்படுவதில் ஏதேனும் பிழையொன்று நிலவுவதனால் மாத்திரம் சபையின் ஏதேனும் நடவடிக்கையொன்று இல்லா தொழியமாட்டாது.

*படிகளைச் செலுத்துதல்.*

(11) சபைக் கூட்டத்தில் கலந்து கொள்ளும் உறுப்பினர்களுக்கு அதற்காக விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சின் உடன்பாட்டுடன் ஆளுநரினால் தீர்மானிக்கப்படும் அத்தகைய ஏதேனும் படியொன்று செலுத்தப்படலாம்.

*சபைக் கூட்டங்கள்.*

(12) சபையானது ஆகக்குறைந்தது 02 பஞ்சாங்க மாதங்களுக்கு ஒரு தடவையாவது கூடுதல் வேண்டும்.

(13) சபைக் கூட்டமொன்றுக்கான கூட்ட நடப்பெண் மொத்த உறுப்பினர்களுள் 1/3 க்கு குறைவடைத லாகாது.

*சபையின் பணிகள்.*

15. சுதேச மருத்துவ ஆலோசனைச் சபையின் பணிகள்

(1) வடமேல் மாகாணத்தில் சுதேச மருத்துவ பணிகளை மேம்படுத்துவற்கும் ஒழுங்குறுத்துவதற்கும் உரியதான சகல விடயங்கள் சம்பந்தமான கடமைகளையும் பணிகளையும் தீர்மானிப்பதற்கு அமைச்சருக்கு அது தொடர்பிலான பிரேரிப்புகளை முன்வைத்தலும் சிபாரிகளைச் செய்தலும்.

(2) சுதேச மருத்துவ முறையை விருத்தி செய்யும் நோக்கில் ஆயுர்வேத மருத்துவ துறைகள் அனைத்தையும் பேணுவது சம்பந்தமாகவும் விசேடமாக ஆயுர்வேத சபை, ஆயுர்வேத சாஸ்திர மூலதத்துவங்கள், ஆயுர்வேத சிகிச்சை, ஆயுர்வேத மருத்துவ உபசரணை போன்ற விடயங்கள் தொடர்பில் தேவையான நடவடிக்கைகள் எடுப்பது சம்பந்தமாகவும் கடமைகளையும் பணிகளையும் வகுத்தமைத்தல், பிரேரிப்புகள் மற்றும் சிபாரிசுகளை வழங்குதல்.

(3) அமைச்சரினால் உசாவுதல் செய்யப்படும் பின்வரும் விடயங்கள் உட்பட சுதேச மருத்துவ துறைக்குரிய விடயங்கள் சம்பந்தமான பிரேரிப்புகள் அவதானிப்புரைகள், ஆலோசனைகள் மற்றும் சிபாரிசுகள் வழங்குதல்.

(அ) சுதேச மருத்துவ நூலகம், நூதனசாலை, மருந்து படிவங்கள், இரசாயனகூடம் உட்பட பிற நிறுவனங்களை நடாத்திச் செல்தல்
(ஆ) ஆயுர்வேத கை நூல்கள், ஆயுர்வேத நூல்கள் உட்பட பிற ஆயுர்வேத சஞ்சிகைகள் அல்லது நூல்கள் வெளியிடுதல்
(இ) ஆயுர்வேத மருந்துகளை பிரபல்யப்படுத்துதல்.

## பாகம் IV

## ஆயுர்வேத மருத்துவமனை அபிவிருத்திக் குழு

*மருத்துவமனை அபிவிருத்தி குழுக் களை தாபித்தலும் கட்டமைப்பும்.*

16. வடமேல் மாகாணத்திலுள்ள ஆயுர்வேத மருத்துவமனைகளின் அபிவிருத்தி மற்றும் புனரமைப்பு பணிகளும் அதனோடு தொடர்புபட்ட இடைநேர்விளைவான பணிகளும் பொது மக்களின் பங்களிப்புடன் செய்வதற்காக நிறுவனமொன்றுக்கு ஒன்று என்னும் அடிப்படையில் மருத்துவமனை அபிவிருத்தி குழுக்கள் தாபித்துக் கொள்ளப்படுதல் வேண்டும்.

குழுவின் கட்டமைப்பு பின்வருமாறாகும்.

(அ) உரிய பிரசேத்தின் பிரதேச செயலாளர்
(ஆ) தாபனத்துக்கப் பொறுப்பான ஆயுர்வேத மருத்துவ உத்தியோகத்தரும் சமூக சுகாதார மருத்துவ உத்தியோகத்தரும்

(இ) பிரதேசத்துக்குப் பொறுப்பான பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி அல்லது அவரது பிரதிநிதியொருவர்

(ஈ) மருத்துவமனை அமைந்துள்ள பிரிவுக்குப் பொறுப்பான கிராம உத்தியோகத்தர்

(உ) அண்மையிலுள்ள பாடசாலையில் அதிபர் அல்லது பிரதிநிதியொருவர்

(ஊ) உள்ளூராட்சி நிறுவனத்தின் செயலாளர் அல்லது அவரது பிரதிநிதியொருவர்

(எ) பாரம்பரிய மருத்துவர்கள் இருவர்

(ஏ) அரசாங்க மற்றும் அரச சார்பற்ற அமைப்புகளின் பிரதிநிதிகள்; அத்துடன்

அல்லது பிரதேசத்தைச் சேர்ந்த பிரமுகர்களை பிரதிநிதித்துவப்படுத்தி மூவர்.

17. குழுக் கூட்டமொன்றை நடாத்திச் செல்வதற்கான கூட்ட நடப்பெண் 07 உறுப்பினர்களாதல் வேண்டும். கூட்டநடப்பெண்

18. i. பிரதேச செயலாளர் குழுவின் தலைவராவதோடு, தாபனத்துக்குப் பொறுப்பான மருத்துவ உத்தியோகத்தர் செயலாளராதலும் வேண்டும். குழுவின் தலைவரும் செயலாளரும்

ii. மேல் (16) ஆம் பிரிவில் (அ) முதல் (ஊ) வரை குறிப்பிடப்பட்டுள்ளவர்கள் உத்தியோகபூர்வ ரீதியில் உறுப்புரிமையை பெறுவர்.

iii. மேல் (16) ஆம் பிரிவில் (எ) மற்றும் (ஏ) என்பவற்றின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள உறுப்பினர்கள் அமைச்சரினால் நியமிக்கப்படுவதோடு, நியமிக்கப்படும் உறுப்பினர்கள் இதனகத்துப் பின்னர் 'நியமனஞ் செய்யப்பட்ட உறுப்பினர்கள்' என அழைக்கப்படுவர்.

iv. குழு உறுப்பினர்களுக்கிடையிலிருந்து ஒருவர் பொருளாலராக தெரிவு செய்து கொள்ளப்படுதல் வேண்டும்.

19. குழுவின் கூட்டங்களுக்காகவும் இந்தக் கூட்டங்களில் செயலாற்றுவதற்காகவும் உரியதாக நடவடிக்கை முறைகளையும் ஒழுங்கு விதிகளையும் இந்த நியதிச்சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுக்கு உட்பட்டு குழுவினால் ஆக்கப்பட்டு ஆணையாளரினால் அங்கீகரிக்கப்படுதல் வேண்டும். நடைமுறை ஆக்குதல்

20. ஆயுர்வேத மருத்துவமனை அபிவிருத்திக் குழுவின் பணிகள் பின்வருமாறாகும். குழுவின் பணிகள்

(1) மருத்துவமனைகளின் அல்லது மத்திய மருந்தகங்களின் சேவைப் பிரதேசத்திற்குள் சுதேச மருத்துவ மற்றும் ஆயுர்வேத நிகழ்ச்சித் திட்டங்களை திட்டமிடுதல், பிரேரிப்புகளை முன்வைத்தல்.

(2) மருத்துவமனை மற்றும் பொதுமக்கள், அரசாங்க நிறுவனங்கள், பகுதி அரசாங்க நிறுவனங்கள், அரச சார்பற்ற அமைப்புக்கள் மற்றும் ஆட்களுக்கிடையிலான ஒருங்கிணைப்பு

(3) ஆயுர்வேத மருத்துவமனை அபிவிருத்திக் குழுக்கள் நிதியத்தை தாபித்தலும் நடாத்திச் செல்தலும்.

(4) மருத்துவமனை அபிவிருத்தி குழு நிதியத்தை நிருவகித்தலும் மேற்பார்வை செய்தலும்

(5) சுதேச மருத்துவ முறைகளை பயன்படுத்தி பிரதேச மக்களின் சுகாதார நிலைமையை மேம்படுத்துவதற்காக தரம்மிக்க சேவையொன்றை வழங்குவதற்கு ஒத்தாசை நல்குதல்.

(6) மருத்துவமனைகளினதும் மத்திய மருந்தகங்களினதும் பணிகளை மேம்படுத்துவதற்கும் சுகாதார பணிகளை மேம்படுத்துவதற்குத் தேவையான பிரேரிப்புக்கள்/சிபாரிசுகள் உரிய பிரிவுகளுக்கு சமர்ப்பிப்பதற்கும் அங்கீகரிக்கப்பட்ட பிரேரிப்புகளை நடைமுறைப்படுத்துவதற்கும் ஒத்துழைப்பு நல்குதலும் நடைமுறைப்படுத்துதலும்.

21. திணைக்களத்தின் அங்கீகாரம் கிடைக்கப்பெற்ற பிரேரிப்புகள் நிதியத்தை கூட்டுவதற்காக நடைமுறைப்படுத்தலுக்கும் இந்த நிதியத்தின் கணக்காய்வுக்கும் மாகாண நிதி ஒழுங்குவிதிக் கோவைக்கு உள்வாங்கப்பட்டுள்ள 1987 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்கச் சட்டம் ஏற்புடையதாகும்.

பாகம் V

**பொது ஏற்பாடுகள்**

வழக்குத் தாக்கல் செய்யும் அதிகாரம்

22. இந்த நியதிச்சட்டத்தின் 30 ஆம் பிரிவின் கீழ் ஏதேனும் குற்றமொன்று புரியப்பட்ட சந்தர்ப்பத்தில் வழக்குத்தாக்கல் செய்யும் அதிகாரம் ஆணையாளருக்கு அல்லது அவரினால் அதிகாரம் கையளிக்கப்பட்ட உத்தியோகத்தர் ஒருவருக்கு உரியதாகும்.

கட்டளைகளை ஆக்கும் அதிகாரம்

23. (1) இந்த நியதிச்சட்டத்திலுள்ள ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்துவதற்கான விடயங்கள் சம்பந்தமாக அமைச்சரானவரினால் கட்டளைகளை ஆக்கலாம்.

(2) அமைச்சரினால் ஆக்கப்படும் சகல கட்டளைகளும் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டு 30 நாட்கள் கடந்ததன் பின்னர் உடனடியாக மாகாண சபையின் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்வதற்காக சமர்ப்பிக்கப்படுதலும் வேண்டும்.

(3) மாகாண சபையினால் அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் கட்டளையொன்று குறித்த கட்டளைகளின் கீழ் முன்னர் புரிந்த நடவடிக்கையொன்றுக்கு பாதிப்பேற்படாதவாறு இல்லாதொழிக்கப்பட்ட தாக கருதப்படுதல் வேண்டும்.

(4) ஏதேனும் கட்டளையொன்று இல்லாதொழிக்கப்பட்டதாகக் கருதப்படும் திகதி பற்றிய அறிவித்தலானது வர்த்தமானியில் பிரசுரிக்கப்படுதல் வேண்டும்.

நிதி ஏற்பாடுகளை வழங்குதல்

24. இந்த நியதிச்சட்டத்தின் கீழ் பணிகளை புரிகையில் திணைக்களம், அதன் கீழ் தாபிக்கப்பட்ட நிறுவனங்கள் மற்றும் சேவைகளை நடாத்திச் செல்வதற்குத் தேவையான நிதி ஏற்பாடுகள் மாகாணத்தின் வருடாந்த வரவுசெலவுத்திட்ட ஆவணத்திலிருந்து, மாகாண சபை நிதியத்திலிருந்து மற்றும் அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்படும் பிற தோற்றுவாய்களிலிருந்து வழங்கப்படுதல் வேண்டும்.

சுதேச மருத்துவ நிருவனங்களை உருவாக்குதலும் பிரிவுகளை மீள் ஒழுங்கு செய்தலும்

25. மாகாணத்தின் சனத்தொகை பரவல், நிலஅளவு, நோய் பரவல், போஷாக்கு நிலைமை, சுற்றாடல் தாக்கம் மற்றும் போக்குவரத்து வசதிகள் போன்றவற்றை அடிப்படையாகக் கொண்டு நிரந்தர அல்லது தற்காலிக அடிப்படையில் புதிய சுதேச மருத்துவ நிறுவனங்களை உருவாக்குதல், சுதேச மருத்துவ நிருவாக பிரிவுகளை உருவாக்குதல் மீள் ஒழுங்குசெய்தல் என்பவற்றை செய்யலாம். இந்த மீள் ஒழுங்கமைப்பானது அமைச்சரினால் வர்த்தமானியில் பிரசுரிக்கப்படுதல் வேண்டும்.

வடமேல் மாகாண சபையின் சுதேச மருத்துவ நிறுவனங்கள் திணைக் களத்துக்கு உடைமை யாக்குதல்

26. இந்த நியதிச்சட்டம் நடைமுறைக்கு வந்ததன் பின்னர் தற்போது வடமேல் மாகாண சபையின் சுதேச மருத்துவம் என்னும் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சின் கீழ் நிலவும் சகல சுதேச மருத்துவ நிறுவனங்களும் அவற்றுக்குரிய சகல நிலையான மற்றும் நிலையற்ற சொத்துக்களும் திணைக்களத்துக்கு உடைமையாக்கப்பட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

உள்ளூராட்சி நிறுவன அதிகாரப் பிரதேசங்களில் சுகாதார பணிகள்.

27. மாகாணத்திலுள்ள உள்ளூராட்சி நிறுவன அதிகாரப் பிரதேசங்களில் சுகாதார நிலை தொடர்பிலான சுதேச மருத்துவ பணிகளைச் செய்வதற்கு ஆணையாளருக்கு அதிகாரம் உள்ளதோடு, இந்த பிரதேசத்திற்குள் சுகாதார நிலை பற்றிய விபர அறிக்கையொன்று தேவைப்படும் சந்தர்ப்பத்தில் சமர்ப்பிக்குமாறு உரிய உள்ளூராட்சி அதிகாரிகளிடம் கோரிக்கை விடுக்கலாம்.

தகவல்கள் வழங் கப்பட வேண்டு மென

28. ஆணையாளரினால் இந்த ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையான சகல விடயங்களுக்கும் உரியதான அறிக்கைகள் அல்லது தகவல்கள் எழுத்துமூல அறிவித்தலில் திட்டவட்டமாக குறிக்கப்பட்டுள்ள நியாயமான காலப் பகுதிக்குள் குறித்த பணிகள் சார்பில் அதிகாரம் கையளிக்கப்பட்டுள்ள உத்தியோகத்தருக்கு வழங்குமாறு எவரேனும் ஆள் ஒருவருக்கு எழுத்து மூலம் விதித்துரைக்கப்படலாம்.

இடைக்கால ஏற்பாடுகள்

29. இந்த நியதிச்சட்டம் நடைமுறைப்படுத்துவதற்கு முன்னைய திகதியன்றில் சுதேச மருத்துவம் என்னும் விடயத்துக்கு நடைமுறைப்படுத்துவதற்கு ஏதேனும் படிவமொன்று, அறிவித்தலொன்று

உரிமப்பத்திரமொன்று ஆவணமொன்று அல்லது அத்தகைய ஆவணமொன்று பயன்படுத்த வேண்டுமென விதித்துரைக்கப்பட்டிருந்தால் குறித்த படிவம், அறிவித்தல், உரிமபத்திரம், ஆவணம் இந்த நியதிச்சட்டத்தின் கீழ் விதித்துரைக்கப்பட்ட ஒன்றென கருதப்படுதல் வேண்டும்.

பாகம் VI

**தவறுகளும் தண்டனைகளும்**

30. (1) இந்த நியதிச்சட்டத்தின் கீழ் அல்லது இந்த நியதிச்சட்டத்தின் நோக்கத்துக்காக இந்த நியதிச்சட்டத்தின் கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதியொன்றின் அல்லது கட்டளையொன்றின் கீழ் ஆக்கப்பட்ட அல்லது வழங்கப்படும் ஏதேனும் அறிக்கையொன்றில் அல்லது வேறு ஆவணமொன்றில் வேண்டுமென்றே உண்மைக்குப் புறம்பான அல்லது பிழையான வெளிப்படுத்தலொன்றை செய்யும் ஆள் ஒருவர். தவறுகள்

(2) இந்த நியதிச்சட்டத்தில் விதித்துரைக்கப்பட்டுள்ள ஏதேனும் தகவலான்றை அல்லது அறிக்கையொன்றை வழங்கத் தவறும் அல்லது நிராகரிக்கும் ஆள் ஒருவர்.

(3) ஆணையாளரின் கட்டளையை அல்லது அறிவித்தலை நியாயமான காரணமின்றி செய்யத் தவறும் ஆள் ஒருவர்.

(4) இந்த நியதிச்சட்டத்தின் கீழ் அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் கட்டளையொன்றின் கீழ் அல்லது எவரேனும் ஆள் ஒருவருக்கு கையளிக்கப்பட்டுள்ள ஏதேனும் தத்துவத்தை, பணியொன்றை அல்லது கடமையை புரியும் போது அல்லது நிறைவேற்றும் போது அவருக்கு இடையூறு விளைவிக்கும் அல்லது தடையாக இருக்கும் சகலரும்.

(5) இந்த நியதிச்சட்டத்தின் கீழ் அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் கட்டளையொன்றை அல்லது ஏற்பாடொன்றை மீறும் அல்லது அதற்கமைவாக செயலாற்றுவதை வேண்டுமென்றே இடையூறு விளைவிக்கும் ஆள் ஒருவர்.

இந்த நியதிச்சட்டத்தின் கீழ் தவறொன்றுக்கு குற்றவாளியாதல் வேண்டும்.

31. இந்த நியதிச்சட்டத்தின் கீழ் தவறிழைக்கின்ற ஆள் எவரும் நீதிவான் முன்னிலையில் நடாத்தப்படும் சுருக்கமுறை வழக்கு விசாரணையின் பின் குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டதன் மேல், இருபதாயிரம் ரூபாவை விஞ்சாத (ரூபா 20,000/-) குற்றப்பணமொன்றுக்கு அல்லது மூன்று (03) மாதங்களை விஞ்சாதவொரு காலத்துக்கு மறியற்றண்டனைக்கு என்னும் இரண்டில் ஏதேனும் ஒரு வகை தண்டனைக்கு அல்லது தண்டனைகள் இரண்டிற்கும் ஆளாதல் வேண்டும்.

பாகம் VII

**பொருள் கோடல்**

32. இந்த நியதிச்சட்டத்தில் சந்தர்ப்பம் வேறுவகையாகத் தேவைப்படுத்தினாலன்றி

'மாகாண சபை' என்னும் போது வடமேல் மாகாண மாகாணசபை எனவும், பொருள் கோடல்

'மாகாணம்' என்னும் போது குருநாகல் மற்றும் புத்தளம் ஆகிய நிருவாக மாவட்டங்கள் உரிய வடமேல் மாகாணம் எனவும்,

'ஆளுநர்' என்னும் போது வடமேல் மாகாணத்தின் ஆளுநர் எனவும்,

'அமைச்சரவை' என்னும் போது வடமேல் மாகாண மாகாண சபையின் அமைச்சரவை எனவும்

'அமைச்சர்' என்னும் போது வடமேல் மாகாண மாகாண சபையின் சுதேச மருத்துவம் என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சர் எனவும்,

'செயலாளர்' என்னும் போது வடமேல் மாகாண மாகாண சபையின் சுதேச மருத்துவம் என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சின் செயலாளர் எனவும்,

'மருந்து' என்னும் போது ஆயுர்வேத, சித்த, யூனானி மற்றும் பாரம்பரிய என பொருள்படும்.

'ஆணையாளர்' என்னும் போது வடமேல் மாகாண மாகாண சபையின் ஆயுர்வேத ஆணையாளர் எனவும்,

'உள்ளூராட்சி நிறுவனங்கள்' என்னும் போது வடமேல் மாகாணத்திலுள்ள மாநகர சபை, நகர சபை, பிரதேச சபை எனவும்,

'இடைநேர் விளைவான ஏனைய சேவைகள்' என்னும் போது சாஸ்திரம், ஆவிகள் சம்பந்தமான மருத்துவ முறை, மிருக மற்றும் தாவர மருத்துவ முறை, ஊசி சிகிச்சை மருத்துவ முறை மற்றும் ஹோமியோபதி வைத்திய முறை எனவும்

'சுதேச மருத்துவ நிறுவனங்கள்' என்னும் போது சுதேச மருத்துவ சேவைகளை வழங்கும் சகல நிறுவனங்கள் எனவும்,

'இந்த நியதிச்சட்டத்தின் நோக்கங்களுக்காக சுதேச மருத்துவ நிறுவனங்கள்' என்னும் போது மருத்துவமனைகள், சிகிச்சை நிலையங்கள், மருந்தகங்கள், விடுதிகள், மருந்துசாலைகள், மூலிகை பூங்காக்கள், மூலிகை நாற்றுக்கள், விற்பனை நிலையங்கள், உற்பத்தி நிலையங்கள், வாசனை மற்றும் மருந்து உற்பத்தி நிலையங்கள், ஆலோசனை சேவை நிலையங்கள், ஆயுர்வேத அழகுக்கலை நிலையங்கள், ஆயுர்வேத என்னும் பேரில் நடாத்திச் செல்லப்படும் சகல நிறுவனங்கள் எனவும்,

'சுதேச மருத்துவ மற்றும் பராம்பரிய மருத்துவர்கள்' என்னும் போது ஆயுர்வேத மருத்துவ சபையில் பதிவு செய்து அத்துடன் செய்யாது வடமேல் மாகாணத்தினுள் சேவைகளை வழங்கும் அனைத்து பாரம்பரிய ஆயுர்வேத சித்த, யூனானி, ஹோமியோபதி, மருத்துவர்கள் எனவும்,

பொருள்படும்

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல்.

33. இந்த நியதிச்சட்டத்தின் சிங்கள, தமிழ், ஆங்கில உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

*03-296/2*

---

# பரீட்சைகளும் பரீட்சைப் பெபேறுகளும்

## மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழு - மேல் மாகாணம்

*மேல் மாகாண அரச சேவையில் கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் III ஆம் தர பதவிக்கான ஆட்சேர்ப்பு செய்தல் - 2017*

*மேல் மாகாண அரச சேவையில் கிராம அபிவிருத்தி அலுவலர் III ஆம் தர பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்காக கீழ் உள்ள தகைமைகளைக் கொண்டுள்ள மேல் மாகாணத்திலுள்ள விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பம் கோரப்படுகின்றன. (இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2016.08.26 ஆம் திகதியின் வர்த்தமானப்பத்திரிகையில் விண்ணப்பம் கோரப்படும் அறிவித்தலுக்கு அமைய இந்தப் பதவிக்கு ஏற்கனவே விண்ணப்பங்களை அனுப்பியுள்ள விண்ணப்பதாரிகள் மீண்டும் விண்ணப்பிப்பது அவசியமற்றதொன்றாகும்.)*

*2. 2.1 இப்பதவிக்குரிய மாதாந்த சம்பள அளவுத்திட்டம் பொ.நி.சு. 03/2016க்கு அமைய ரூபா 31,490-10X445-11X660-10X730-5X750-ரூபா 54,250 ஆகும் (MN 4-2016) பொ.நி.சு. 03/2016) ஏற்பாடுகளுக்கு அமைய சம்பளம் வழங்கப்படும்)*

*2.2 விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி 2017.04.07 ஆகும். விண்ணப்பிக்கும் பதவிக்குரிய சகல தகைமைகளும் 2017.04.07 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.*

**3. பொது நிபந்தனைகள்**

அ. இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.

ஆ. சிறந்த நன்னடத்தை மற்றும் உடல் மற்றும் உளரீதியான தகைமைகளைப் பெற்றிருத்தல் வேண்டும்.

இ. விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் திகதிக்கு அண்மித்த 03 வருடங்கள் தொடர்ச்சியாக மேல் மாகாணத்தில் நிரந்தர வதிவாளராக இருத்தல் வேண்டும்.

ஈ. வயதெல்லை 18 வருடங்களுக்கு குறையாமலும் மற்றும் 35 வருடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

4. **சேவை நிபந்தனைகள்** : இப்பதவி நிரந்தரமான, அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு நடைமுறைகள், அரசாங்கத்தினால் நிறைவேற்றப்படும் சேவை நிபந்தனைகளுக்கு உட்பட்டதாகும்.

5. **தகைமைகள் :**

5.1 கல்வித் தகைமை

5.1.1 பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ள பல்கலைக்கழகமொன்றில் பட்டம் பெற்றிருத்தல் வேண்டும்.

6. **ஆட்சேர்ப்பு முறை :**

எழுத்துப்பரீட்சையின் பெறுபேற்றுக்கு அமைய திறமை ஒழுங்குகளின் அடிப்படையில் நேர்முகப்பரீட்சைக்குத் தோற்றி பரீட்சிக்கப்பட்டு பின்னர் காணப்படும் வெற்றிடங்களுக்காக ஆட்சேர்ப்புச் செய்யப்படும். இந்தப் போட்டிப்பரீட்சை 02 பாடங்களைக் கொண்ட 02 வினாப்பத்திரங்களைக் கொண்டிருப்பதுடன், சித்திபெறுவதற்காக ஒவ்வொரு வினாப்பத்திரத்திலும் குறைந்த அளவாக 40% புள்ளிகளைப் பெற்றிருத்தல் வேண்டும்.

6.1 **எழுத்துப் பரீட்சையின் பாடத்திட்டம்** :

1. பொது உளச்சார்புப் பரீட்சை : நேரம் 01 மணித்தியாலம் 100 புள்ளிகள்
   பரீட்சார்த்தியின் மொழித்திறமை தர்க்கிக்கும் திறன், கணிதவியல் திறன் போன்றவற்றை பரீட்சிப்பதற்காக தயாரிக்கப்பட்டுள்ள வினாக்களைக் கொண்ட வினாப்பத்திரமாகும்.
2. பொது அறிவுப்பரீட்சை : நேரம் 01 மணித்தியாலம் 100 புள்ளிகள்

பொருளாதாரம், அரசியல், கல்வி, சமூகம், கலாச்சாரம், விஞ்ஞானம் மற்றும் விளையாட்டுத்துறையில் உள்நாட்டிலும் மற்றும் வெளிநாடுகளிலும் நடைபெற்ற முக்கியமான காலத்தின் நிகழ்வுகள் தொடர்பாக பரீட்சாத்தியின் அறிவை பரீசீலணை செய்வதற்காக தயாரிக்கப்பட்டுள்ள வினாக்களைக் கொண்ட வினாப்பத்திரமாகும்.

07. **விண்ணப்பிக்கும் முறை** :

7.1 பரீட்சைக் கட்டணம் ரூபா 400/- ஆகும். இந்த பரீட்சைக் கட்டணம் மேல் மாகாணத்தினுள் அமைந்துள்ள எந்தவொரு பிரதேச செயலாளர் காரியாலயத்திலும் மேல் மாகாண வருமான தலைப்பு 20-03-02-99க்கு வரவிடப்படும் விதத்தில் பணமாக செலுத்தி பெற்றுக்கொள்ளப்பட்ட பற்றுச்சீட்டை விண்ணப்பப்பத்திரத்தில் கழராதவாறு ஒட்டி அனுப்ப வேண்டும். செலுத்தப்பட்டுள்ள பரீட்சைக் கட்டணம் எந்தக் காரணத்தைக் கொண்டும் மீள் செலுத்தப்படமாட்டாது. அந்த பற்றுச்சீட்டின் புகைப்படப்பிரதியொன்றை தம்மிடத்தில் வைத்திருப்பது பிரயோசனமுடையதாகும்.

7.2 விண்ணப்பப்பத்திரம் இந்த அறிவித்தலில் காட்டப்பட்டுள்ள மாதிரிப் படிவத்திற்கு அமைவாக பிழையின்றி பூர்த்தி செய்து 2017.04.07 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் செயலாளர், மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழு (மே.மா.) இலக்கம் 109, பிரதான வீதி, பத்தரமுல்ல எனும் முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் 'மேல் மாகாண அரசாங்க சேவையில் கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் III ஆம் தர பதவிக்காக ஆட்சேர்ப்பு செய்தல் -2017' என குறிப்பிடப்படல் வேண்டும். (தற்போது அரச / மாகாண அரச நிரந்தர சேவையிலுள்ள விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பத்தை சேவை திணைக்களத் தலைவரின் ஊடாக அனுப்புதல் வேண்டும்) குறித்த திகதியின் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் மற்றும் தேவையான தகைமைகளைப் பூர்த்தி செய்யாத விண்ணப்பங்கள் என்பன அறிவித்தல் எதுவுமின்றி நிராகரிக்கப்படும்.

7.3 விண்ணப்பதாரி ஒருவருக்கு பரீட்சைக்கு பிரவேசிக்கும் அனுமதி அட்டையொன்று வழங்கப்படுவது அவர் இந்த பதவிக்காக தகைமையைப்பூர்த்தி செய்துள்ளார் என ஏற்றுக் கொள்வதாக கருதப்படமாட்டாது. விண்ணப்பதாரி நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்படுவது அறிவித்தலுக்கு அமைய உரிய தமைமையை பெற்றிருக்கின்றாரா என்பது பரீசீலனை செய்யும் சந்தர்ப்பத்தில் தேவையான தகைமைகள் இல்லையென கண்டுபிடிக்கப்பட்டால் அவரது பரீட்சார்த்த தன்மை இரத்துச்

செய்யப்படும். இந்த விண்ணப்பம் கோரப்பட்ட அறிவித்தலில் உள்ளடக்கப்பட்டுள்ள /படாத உரிய விடயங்கள் தொர்பாக இறுதித்தீர்மானம் மேல் மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழுவுக்கே உரித்துடையதாகும்.

எம். ஜி. ஏ. திலக்கரத்ன,
செயலாளர்.

மேல் மாகாண அரச சேவை ஆணைக்குழு,
மேல் மாகாணம்,
2017.02.15.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**மேல் மாகாண அரசாங்க சேவையில் கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் IIIஆம் தர பதவிக்கான ஆட்சேர்ப்பு செய்தல் -2017**

பரீட்சை இலக்கம் : - ☐
(அலுவலக உபயோகத்திற்காக)

01.(அ) முதலெழுத்துக்களுடன் பெயர்: ..........................................................

(ஆ) முழுப் பெயர் (சிங்களம்/தமிழ்): ..........................................................

(இ) முழுப் பெயர் (ஆங்கில பெரிய எழுத்தில்) : ..........................................................

(உ) தேசிய ஆள்அடையாள அட்டை இலக்கம் : ☐☐☐☐☐☐☐☐☐☐

02. பரீட்சைக்குத் தோற்றும் மொழி சிங்களம் : ☐ தமிழ் : ☐
(உரிய கூட்டினுள் ' √'அடையாளமிடுக)

03. பரீட்சை அனுமதி அட்டை அனுப்ப வேண்டிய முகவரி : ..........................................................

i. நிரந்தர முகவரி (சிங்களம்/தமிழ்) :..........................................................

ii. நிரந்தர முகவரி (ஆங்கில பெரிய எழுத்தில்) : ..........................................................

iii. நிரந்தர வதிவிட மாவட்டம் (உரிய கூட்டினுள் " √ " அடையாளமிடுக)

கொழும்பு ☐ கம்பஹா ☐ களுத்துறை ☐

iv. விண்ணப்பம் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித்தினத்தன்று 2017.04.07க்கு உரிய மாவட்டத்தில் நிரந்தர வதிவு

வருடங்கள் : ☐☐ மாதங்கள் : ☐☐ நாட்கள் : ☐☐

v. தொலைபேசி இலக்கம் : ........................................

04. பிறந்த திகதி : ஆண்டு: ☐☐☐☐ மாதங்கள் : ☐☐ திகதி : ☐☐

விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி திகதியன்று 2017.04.07 க்கு வயது :

வருடங்கள் : ☐☐☐☐ மாதங்கள்: ☐☐ நாட்கள் : ☐☐

05. பால் : (உரிய கூட்டினுள் " √ " அடையாளமிடுக)

ஆண் ☐ பெண் ☐

06. கல்வித் தகைமைகள்

i. பெறப்பட்டுள்ள பட்டம் : ..........................................................

ii. பட்டப்படிப்பின் போது கற்ற பிரதான பாடங்கள் : ..........................................................

iii. பல்கலைக்கழகத்தின் பெயர் : ..........................................................

iv. பட்டப்படிப்பு சான்றிதழ் செல்லுபடியாகும் திகதி : ..........................................................

(பட்டப்படிப்பு சான்றிதழின் பிரதி இணைக்கப்பட்டு அனுப்பப்பட வேண்டும்)

7. பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்ட பற்றுச்சீட்டு இலக்கம் : ......................................

திகதி : .......................................

பற்றுச்சீட்டு பெறப்பட்டுள்ள பிரதேச செயலாளர் காரியாலயம்

| பற்றுச்சீட்டை இக்கூட்டினில் கழராதவாறு ஒட்டவும் |
|---|

.................................................................... ஆகிய என்னால் இந்த விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் எனது அறிவுக்கும் நம்பிக்கைக்கும் பிரகாரம் உண்மையானவை மற்றும் சரியானவை எனவும் உறுதிப்படுத்துகின்றேன். என்னால் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் பிழையானவை என தெரியவந்தால் என்னால் விண்ணப்பிக்கப்பட்டுள்ள மேல் உள்ள பதவிக்கு நியமிப்பதற்காகவுள்ள எனது உரிமை கவனத்தில் கொள்ளப்படாமல் இருப்பதற்கும், எனக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதற்கு முடியும் என்பதை நான் நன்றாக அறிவேன். மேலும் பரீட்சை நடைபெறுவது தொடர்பாக விதிக்கப்பட்டுள்ள சட்ட விதிகளுக்கு நான் கீழ்ப்படிவேன் என அறவிக்கின்றேன்.

..........................................................

விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி : .......................................

**விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதி செய்தல்**

(தேவையற்ற வசனங்களை வெட்டி விடவும்)

இந்த விண்ணப்பத்தை சமர்ப்பிக்கும் திரு./திருமதி/செல்வி : ................................................................................. என்பவரை நான் தனிப்பட்ட முறையில் அறிவேன் எனவும் அவர் / ................................................ ஆம் திகதி எனது முன்னிலையின் அவரது கையொப்பத்தை இட்டார் எனவும் உறுதிப்படுத்துகின்றேன்.

................................................................

கையொப்பம்

கையொப்பத்தை உறுதிப்படுத்துபவரின் பெயர்

பதவி மற்றும் உத்தியோக முத்திரை

(இந்தச் சான்றிதழ் அரசாங்கப் பாடசாலையொன்றின் அதிபர், சமாதான நீதவான், சத்தியப் பிரமான ஆணையாளர், சட்டத்தரணி, முப்படையைச் சேர்ந்த அதிகாரி ஒருவர் அல்லது வருடாந்தம் ரூபா 240,360/- க்கு குறையாத ஒன்று சேர்க்கப்பட்ட சம்பளத்தைப் பெறும் நிரந்தர பதவி வகிக்கும் அரச மாகாண அரச சேவையின் உத்தியோகத்தர் ஒருவரினால் உறுதிப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.)

**அரசாங்க அல்லது மாகாண அரசாங்க சேவையில் தற்போது சேவையில் உள்ள விண்ணப்பதாரிக்காக திணைக்களத் தலைவரினாலான சான்றிதழ்**

(தேவையற்ற சொற்களை வெட்டி விடவும்)

திரு./திருமதி/செல்வி ................................................................................... தற்போது இந்த அமைச்சில் /திணைக்களத்தில் ................................................................. ஆக நிரந்தர ஓய்வூதியம் உள்ள பதவியொன்றில் சேவையாற்றுகின்றார் எனவும், அவரருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படவில்லையெனவும், ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதற்கு உத்தேசிக்கப்படவில்லை எனவும் மேலே குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் சரியானவை எனவும் உறுதிப்படுத்துவதுடன் இந்தப் பரீட்சையின் பெறுபேறுக்கு அமைய நியமனத்திற்காக அவர் தெரிவு செய்யப்பட்டால் அவர் தற்போது வகிக்கும் பதவியிலிருந்து விடுவிக்க முடியும் என உறுதிப்படுத்துகின்றேன்.

திகதி : ....................................

..................................

திணைக்களத் தலைவரின் கையொப்பம்

(உத்தியோக பூர்வ முத்திரை)

04-274

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.